# கொள்கை விளக்கக் குறிப்பு – 2009–10

## மானியக் கோரிக்கை எண். 44

## குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

**முன்னுரை**

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் பங்களிப்பு, மிகவும் முக்கியமானதாகத் திகழ்கிறது. அவை உற்பத்தியை பெருக்குவதின் மூலம் பெருமளவில் வேலைவாய்ப்பை அளிக்கின்றன. விவசாயத்திற்கு அடுத்தபடியாக வேலைவாய்ப்பை உருவாக்குவதில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. குறிப்பாக, பழமையான கிராம, கைவினைத் தொழில்கள் முதல் மேம்பட்ட தொழில் நுட்பம் மற்றும் உயிரித் தொழில் நுட்பம் வரையிலான தொழிற் பிரிவுகளில் வேலைவாய்ப்பை அளிப்பதில் இந்நிறுவனங்களின் பங்களிப்பு குறிப்பிடதக்கதாகும். குறைந்த அளவு முதலீட்டில் அதிக எண்ணிக்கையில் வேலைவாய்ப்பை அளிக்கக்கூடிய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் முக்கியத்துவத்தை கருத்திற் கொண்டு இத்தொழில்கள் மேலும் பெருகவும், மற்றும் வளர்ச்சியடையவும் தமிழக அரசால் “குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் கொள்கை 2008“ அறிவிக்கப்பட்டு செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இக்கொள்கையைச் செயல்படுத்துவதில் தமிழக அரசின் தொழில் வணிகத் துறை, தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ), மற்றும் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி) ஆகிய அரசு நிறுவனங்கள் முறையே, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ‘தொழில் அனுமதி மற்றும் மானியம் வழங்குதல்’, ‘தொழில் மனைகள் ஒதுக்கீடு செய்தல், உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்’, ‘தொழிலகங்களுக்கு தேவையான தளவாடங்களை வழங்குதல்’ முதலிய பணிகளைச் செய்து வருகின்றன.

**2. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் மேம்பாட்டுச் சட்டம் 2006**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதற்காக மைய அரசு ‘குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் 2006’ஐ இயற்றியது. இச்சட்டம் சிறு தொழில் பிரிவு என்ற பெயரை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பிரிவு என மாற்றி நிறுவன உட்பிரிவிற்கு உரிய முக்கியத்துவம் வழங்கியிருப்பதுடன் நடுத்தரத் தொழில் நிறுவனங்களையும் இப்பிரிவின் கீழ் கொண்டு வந்துள்ளது.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம், உற்பத்தி நிறுவனங்களை அவற்றின் இயந்திர தளவாடங்களின் மீதான முதலீட்டின் அடிப்படையில் (நிலம் மற்றும் கட்டிட மதிப்பு நீங்கலாக) கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தி உள்ளது:-

| | |
|---|---|
| குறு உற்பத்தி நிறுவனங்கள் | ரூ.25 இலட்சம் வரை |

| | |
|---|---|
| | உள்ளவை |
| சிறு உற்பத்தி நிறுவனங்கள் | ரூ.25 இலட்சத்திற்கு மேல் ரூ.5 கோடி வரை உள்ளவை |
| நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள் | ரூ.5 கோடிக்கு மேல் ரூ.10 கோடி வரை உள்ளவை |

என்றும், அதே போன்று சேவை நிறுவனங்களை அவற்றின் தளவாடங்களின் மீதான முதலீட்டின் அடிப்படையில் (நிலம் மற்றும் கட்டிட மதிப்பு நீங்கலாக) கீழ்க்கண்டவாறு வகைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| குறு சேவை நிறுவனங்கள் | ரூ.10 இலட்சம் வரை உள்ளவை |
| சிறு சேவை நிறுவனங்கள் | ரூ.10 இலட்சத்திற்கு மேல் ரூ.2 கோடி வரை உள்ளவை |
| நடுத்தர சேவை நிறுவனங்கள் | ரூ.2 கோடிக்கு மேல் ரூ.5 கோடி வரை உள்ளவை |

## 3. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை – 2008

மைய அரசின் சட்டத்திற்கு இணங்க, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனகளுக்கான தனிப்பட்ட கொள்கையை, 22.2.2008 அன்று வெளியிட்டார்கள். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்காக தனியான ஒரு கொள்கையை வெளியிடுவது, நாட்டிலேயே முதன் முறையாக தமிழ்நாட்டில் நிகழ்ந்துள்ளது. இதன் மூலம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் செயல்திறன் மேம்பட்டு, பதினோராவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் இவற்றின் ஆண்டு வளர்ச்சி 10 விழுக்காடு வரை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் பதினோராவது ஐந்தாண்டு திட்ட காலத்தில், 10 இலட்சம் பேருக்கு நேர்முக மற்றும் மறைமுகமாக வேலை வாய்ப்பு கிடைக்கும். இந்த கொள்கை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்திலும் மாநிலத்தில் உள்ள தொழில் நிறுவனங்களின் உள்கட்டமைப்பு வளர்ச்சியை மேம்படுத்தவும், தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய வட்டாரங்களில் நிறுவப்படும் உற்பத்தித் தொழில் நிறுவனங்களுக்கு மானிய திட்ட உதவிகள் வழங்குதல், திறன் மேம்பாடு மற்றும் சந்தை வாய்ப்பு ஏற்படுத்துதல், கட்டுப்பாடுகளைத் தளர்த்தி எளிமைப் படுத்தல், நிர்வாகச் சீர்திருத்தம், மற்றும் நலிவடைந்த தொழில் நிறுவனங்களை புனரமைத்தல் ஆகியவற்றை மையமாகக் கொண்டு இக்கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சியில் மைய மற்றும் மாநில அரசுத் துறைகளைச் சார்ந்த கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணையம், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், கயிறு வாரியம், இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கி (சிட்பி), தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், மற்றும் தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி ஆகியவற்றின் மூலம் உதவிகள் மற்றும் கடன் பெற்று புதிய வேலைவாய்ப்புகளை பெற இக்கொள்கை வழிவகை செய்கிறது.

இக்கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மானிய உதவிகளை விரைந்து செயல்படுத்தும் முகமாக, இம்மானியத் திட்டங்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை அரசு வகுத்து 7.5.2008 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

**4. தொழில் வணிக ஆணையரகம்**

தொழில் வணிக ஆணையரகம் தமிழ்நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு ஒருங்கிணைந்த முகமையாக விளங்குகிறது. இந்நிறுவனங்களை மையப்படுத்தி மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களை இந்த ஆணையரகம் செயல்படுத்தி வருகிறது. இதற்கென தமிழகத்தில் சென்னையைத் தவிர 29 மாவட்டங்களில் மாவட்ட தொழில் மையங்களும், சென்னையில் மண்டல இணை இயக்குநர் அலுவலகமும் செயல்பட்டு வருகின்றன. தொழில் தொடங்க முன்வரும் தொழில் முனைவோர்கள் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களைத் தொடங்குவதற்குரிய அனைத்து உதவிகளையும் அவை செய்து வருகின்றன. மாவட்ட தொழில் மையங்கள் தொழில் முனைவோர்க்கு தொழில் பிரிவுகளைக் கண்டறிதல், தொழில் திட்டங்களைத் தயாரித்தல், நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவிகளை பெற்றுத் தருதல், தொழில் துவங்க அரசின் பல்வேறு துறை சார்ந்த ஒப்புதல்களைப் பெற்று அளித்தல், அரசு மானியங்கள் மற்றும் ஊக்குவிப்பு தொகைகளை வழங்குதல் ஆகிய பணிகளைச் செய்து வருகின்றன.

மாநிலத்தின் ஏற்றுமதியை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் அரசு, தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்களை மாநிலத்தின் ஏற்றுமதி ஆணையராக நியமித்து ஆணைகள் வெளியிட்டுள்ளது.

**5. தொழில் முனைவோர் பதிவேடு பதிவு செய்தல்**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் 2006–இன் படி சிறு தொழில் பதிவு முறைக்கு பதிலாக தொழில் முனைவோர் பதிவேடு பதிவு முறை கொண்டு வரப்பட்டுள்ளது. நடுத்தர உற்பத்தி நிறுவனங்களுக்கு இது கட்டாயமானது. ஆயினும் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களும் நடுத்தர சேவை நிறுவனங்களும் விரும்பினால் தொழில்முனைவோர் பதிவேடு பதிவு செய்யலாம். குறு மற்றும் சிறு தொழில் தொடங்க விருப்பம் உள்ள எவரும் தாமாக முன் வந்து, தேவைப்படும் உரிய படிவத்திலான தொழில்முனைவோர் பதிவேட்டை, அந்தந்த மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளரிடம் பதிவு செய்யலாம். சென்னையைப் பொறுத்தவரை மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்யலாம்.

மின் ஆளுமையின் முனைப்பு நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக, இணையதளத்தின் மூலமாக தொழில் முனைவோர் பதிவேடு – பகுதி 1 பதிவு செய்யப்படும் என, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்களால் சட்டசபையில் அறிவிக்கப்பட்டது. இதன் முதல் கட்டமாக, இணையதளத்தின் மூலமாக தொழில் முனைவோர் பதிவேடு – பகுதி 1, பதிவு செய்யும் முறை 8.8.2008 அன்று மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இதன் இரண்டாவது கட்டமாக மாண்புமிகு மத்திய கப்பல் மற்றும் தரைவழிப் போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களால் 11.10.2008 அன்று இணையதளத்தின் மூலமாக தொழில் முனைவோர் பதிவேடு – பகுதி 2 பதிவு செய்யும் முறை துவக்கி வைக்கப்பட்டது.

இதனால் தற்போது எந்தவொரு குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோரும் மிக எளிதாக அவர்களது தொழில் முனைவோர் பதிவேடு பதிவு விண்ணப்பம் பகுதி 1 மற்றும் பகுதி 2-ஐ எந்த ஒரு மாவட்ட தொழில் மையத்திற்கும் செல்லாமல் தாங்களாகவே இணையதளத்தின் மூலம் (www.msmeonline.tn.gov.in) பதிவு செய்து அதற்கான ஒப்புகையை உடனடியாக பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்ப்பின் மூலம் 31.3.2009 வரையில் தொழில் முனைவோர் பதிவேடு – பதிவு பகுதி 1 இல் 21,395 நிறுவனங்களும் பகுதி 2–இல் 9,407 நிறுவனங்களும் இணையதளத்தின் மூலமாக பதிவு செய்யப்பட்டுள்ளன. இது இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன் முதலாக செயல்படுத்தப்படும் திட்டமாகும்.

**6. மானியத் திட்டங்கள்**

**அ. குறுந்தொழில் உற்பத்தி நிறுவனங்களுக்கான சலுகைகள்**

மாநிலத்தில் எப்பகுதியில் நிறுவப்படும், குறுந்தொழில் (Micro) உற்பத்தி நிறுவனங்களுக்கு கீழ்க்கண்ட மானிய திட்டங்கள் செயல் படுத்தப்படுகின்றன.

- தகுதியான இயந்திரத் தளவாடங்களின் மதிப்பில் 15 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சம் முதலீட்டு மானியம் வழங்கப்படும்.
- தொழில் முனைவோர் பதிவேடு பகுதி 2 எண் ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னர் வணிக ரீதியில் உற்பத்தி தொடங்கிய நாள் அல்லது மின்இணைப்பு பெற்ற நாள் இவற்றில் எது பிந்தியதோ அந்நாளிலிருந்து 36 மாதங்களுக்கு 20 விழுக்காடுகள் குறைந்த அழுத்த மின் மானியம் வழங்கப்படும்.
- தொழில் முனைவோர் பதிவேடு பகுதி 2 எண் ஒதுக்கீடு செய்யப்படும்போது உள்ள இயந்திர தளவாடங்கள் மீது செய்யப்பட்டிருக்கும் முதலீட்டின் மீது முதல் 6 ஆண்டுகளுக்கு செலுத்தப்படும் நிகர மதிப்பு கூட்டுவரிக்கு ஈடான 100 விழுக்காடு மானியம் வழங்கப்படும்.

**ஆ. தொழில் ரீதியாக பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்ட 251 வட்டாரங்களில் அமைக்கப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள் மற்றும் மாநிலத்தின் அனைத்து 385 வட்டாரங்களிலும் அமைக்கப்படும் வேளாண்சார் தொழில் நிறுவனங்களுக்கான சலுகைகள்**

அரசால் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளாக 251 வட்டாரங்கள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும் அரசு மற்றும் அரசு முகமைகளான சிப்காட், சிட்கோ ஆகியவை உருவாக்கும் தொழிற்பேட்டைகளும் (சென்னை நகரின் மையப்பகுதியில் இருந்து 50 கிலோமீட்டர் சுற்றளவிற்குள் அமைந்துள்ள தொழிற்பேட்டைகள் தவிர்த்து) தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் அமைக்கப்படும் அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்களும் மற்றும் மாநிலத்தின் 385 வட்டாரங்களில் அமைக்கப்படும் வேளாண்சார் நிறுவனங்களும் கீழ்க்கண்ட மானிய உதவி திட்டங்களின் கீழ் பயன்பெற தகுதியுடையனவாகும்.

- தகுதியான இயந்திர தளவாடங்களின் மதிப்பில் 15 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் முதலீட்டு மானியமாக வழங்கப்படும்.
- உற்பத்தி தொடங்கிய முதல் 5 ஆண்டுகளுக்குள் மூன்று ஆண்டுகள், குறைந்தபட்சம் 25 வேலையாட்களைப் பணியில் ஈடுபடுத்தும் நிறுவனங்களுக்கு அவற்றின் தகுதியான இயந்திர

தளவாடங்களின் மீதான முதலீட்டின் 5 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.5 இலட்சம் கூடுதல் முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

- மகளிர், பட்டியலிடப்பட்ட இனம் / பட்டியலிடப்பட்ட பழங்குடியினர், உடல் ஊனமுற்றோர் மற்றும் அரவாணிகள் ஆகியோர் தொழில் முனைவோராக இருக்கும் நேர்வுகளில் அவற்றின் தகுதியான இயந்திர தளவாடங்களின் மீதான முதலீட்டின் 5 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.2 இலட்சம், கூடுதல் முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

- மாசற்ற மற்றும் சுற்றுச்சூழலுக்கு இயைந்த தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு, அதற்கான சுற்றுப்புறத் தூய்மையினைக் காக்கும் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன என தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் சான்றளிப்பதன் அடிப்படையில் நிறுவப்பட்ட குறிப்பிட்ட, தகுதியான இயந்திர தளவாடங்கள் மீதான முதலீட்டின் மதிப்பில் 25 விழுக்காடு அதிகபட்சம் ரூ.3 இலட்சம் கூடுதல் முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

- தொழில் முனைவோர், வணிக ரீதியில் உற்பத்தி தொடங்கிய நாள் அல்லது மின்இணைப்பு பெற்ற நாள் இவற்றில் எது பிந்தியதோ அந்நாளிலிருந்து 36 மாதங்களுக்கு 20 விழுக்காடுகள் குறைந்த அழுத்த மின் மானியம் வழங்கப்படும்.

**இ. மாநிலத்தில் எப்பகுதியிலும் அமைக்கப்படும் சிறப்பு வகை உற்பத்தி நிறுவனங்களுக்கான சிறப்பு மூலதன மானியம்**

தமிழ்நாட்டில் எப்பகுதியிலும் அமைக்கப்படும் 10 சிறப்பு வகை உற்பத்தி தொழில் பிரிவுகளான மின் மற்றும் மின்னணு பொருள்கள், தோல் மற்றும் தோல்பொருள்கள், வாகன உதிரி பாகங்கள், மருந்து மற்றும் மருத்துவ பொருள்கள், சூரிய சக்தி பயன்பாட்டு உபகரணங்கள், ஏற்றுமதிக்கான தங்கம் மற்றும் வைர நகைகள், மாசுக் கட்டுப்பாட்டு சாதனங்கள், விளையாட்டுப் பொருள்கள் மற்றும் உதிரிபாகங்கள் மற்றும் சிக்கன அடக்கவிலை கட்டுமானப் பொருள்கள் மற்றும் ஆயத்த ஆடைகள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்களுக்கு, தகுதியான இயந்திர தளவாடங்கள் மீதான முதலீட்டு மதிப்பில் 15 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.30 இலட்சம் சிறப்பு மூலதன முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

**ஈ. மின்னாக்கி மானியம்**

இம்மானியத் திட்டத்தின் கீழ் மாநிலத்தில் எப்பகுதியிலும் அமைந்துள்ள குறு சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள் வாங்கியுள்ள மின்னாக்கியின் மதிப்பில் 25 சதவிகிதம் (125 KVA வரை) அதிகபட்சமாக ரூ. 1.50 இலட்சம் வரை மின்னாக்கி மானியம் வழங்கப்படும்.

**உ. பின்முனை வட்டி மானியம்**

மைய அரசின் கடன் உத்திரவாதத்துடன் இணைந்த முதலீட்டு மானிய உதவித் திட்டத்தின் விதிமுறைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நன்கு உறுதிசெய்யப்பட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பம் கொண்ட இயந்திரங்களை நவீனப்படுத்தலுக்காக நிறுவும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் உற்பத்தி நிறுவனங்களுக்கு அவற்றால் பெறப்பட்ட ரூ.100 இலட்சம் வரையுள்ள கடன்களின் மீது 3 விழுக்காடு, (நிறுவனம் ஒன்றுக்கு அதிகபட்சமாக ஐந்தாண்டு காலத்தில் மொத்த வட்டி மானியம் ரூ.10 இலட்சம்) பின்முனை வட்டி மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

**7. தொழில் நுட்ப மேம்பாடு தொடர்பான உதவித்திட்டங்கள்**

பின்வரும், புதிய தொழில் நுட்ப மேம்பாட்டுத் திட்டங்கள் குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் கொள்கை 2008–இல் அறிவிக்கப்பட்டன.

- குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் உரிமைக்காப்பு (கண்டறிதல் உரிமை) பதிவு விண்ணப்பத்திற்கான தொகையில் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் 50 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் மற்றும் வர்த்தக குறியீடு பதிவு தொகையில் 50 சதவீதம் அல்லது ரூ.25,000 இதில் குறைவான தொகை எதுவோ அது உதவியாக அளிக்கப்படும்.

- அரசு மற்றும் தனியார் கூட்டு முயற்சியின் மூலம் தொழில் குழுமங்கள் மற்றும் சிறு கருவி மையங்கள் ஆகியவற்றை அமைப்பதற்கு, அவற்றின் திட்டமதிப்பீட்டில் 25 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.1 கோடி வரை மானியமாக வழங்கப்படும்.

- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் உற்பத்தி பிரிவில் தூய்மையான சக்தி திறனுள்ள தகவல் தொழில் நுட்பம் தொடர்புடைய தொழில் நுட்பங்களை ஏற்படுத்த வசதி செய்து தருவதில் உதவுதல்

- திறன் மிகு மையங்கள் மற்றும் தொழில் நுட்ப வணிக சேவை வசதி வளர்ப்பகங்கள் உருவாக்கி அதன் மூலம் நவீன உற்பத்தி உத்திகள் மற்றும் வடிவமைப்பு மேம்பாடு செய்ய ஒவ்வொரு தொழில் நுட்ப வணிக சேவை வசதி வளர்ப்பகம் / திறன்மிகு மையத்திற்கும் ரூ.50 இலட்சம் உதவுதல்

**8. திறன் மேம்பாடு மற்றும் பயிற்சித் திட்டங்கள்**

திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி திட்டம் மாநில அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கை 2008இல் அறிவிக்கப்பட்டுள்ளது. தொழில் தொடர்புடைய சங்கங்களால் ஏற்பாடு செய்யப்படும் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் திறன் மேம்பாடு திட்டங்களாகிய குறுகியகால பயிற்சி வகுப்புகள் நடத்த 50 விழுக்காடு பயிற்சிக் கட்டணம் திரும்ப வழங்கப்படும்.

**9. சந்தை வாய்ப்பு உதவி**

பின்வரும் சந்தை வாய்ப்பு உதவிகளை தமிழக அரசானது குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான கொள்கை 2008இல் அறிவித்துள்ளது.

- தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்த புள்ளிகள் சட்டம் 1998 இல் குறிப்பிட்டப்பட்டுள்ள உள்நாட்டு குறு மற்றும் சிறு தொழில்களுக்கு 15 விழுக்காடு விலை முன்னுரிமை அளித்தல்.

- மாநில அரசால் அவ்வப்பொழுது வெளியிடப்படும் அறிவிக்கைகளின்படி அறிவிக்கப்படும் இனங்களுக்கு கொள்முதல் முன்னுரிமை அளித்தல்.

- ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொள்வதற்கு அளிக்கும் முன்வைப்புத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்தல்.

- குறு சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் சார்புடைய சங்கங்கள் நடத்தும் பொருட்காட்சிகளில் கலந்து கொள்ளும் நேர்வுகளில் அரங்க வாடகையில் 50 விழுக்காடு, மாநிலத்திலும் மற்ற மாநிலங்களிலும் வழங்கப்படும்.

- பொதுவான பெயர் அல்லது பொது வணிக சின்னத்தில் விற்பனை செய்ய ஆதரவு அளித்தல்.

**10. நலிவடைந்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் புனரமைப்புக்கான கொள்கை**

முதல்முறையாக குறு, சிறு மற்றும் நடுத்தர நலிவடைந்த நிறுவனங்களைப் புனரமைப்பதற்கான கொள்கை உரிய புனரமைப்பு உதவித் திட்டத்துடன் வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் கொள்கையானது நலிவுற்ற நிறுவனங்களைப் புனரமைப்பது தொடர்பான விரைவான பகுப்பாய்வு, வழங்கப்பட வேண்டிய நிவாரணம் பற்றிய பரிந்துரைகளை இந்திய ரிசர்வ் வங்கி அமைக்கும் மாநில அளவிலான நிறுவனங்களுக்கிடையிலான குழுவினால் (SLIIC) வழங்கப்பட்டு, மாநில அளவிலான நிறுவனங்களுக்கு இடையிலான புனரமைப்புக் குழுவின் (SLRC) மூலம் தகுதி வாய்ந்த நிறுவனங்களைக் கண்டறிந்து புனரமைப்பு உதவிகள் வழங்கிட வகை செய்கிறது.

இக்கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிவாரண உதவி திட்டங்கள் குறித்த வழிகாட்டு நெறிமுறைகள் அரசால் விரைவில் வெளியிடப்படும். மேலும், நலிவுற்ற நிறுவனங்களின் பகுப்பாய்விற்காக ஏற்படும் செலவின் 75 சதவீதத் தொகையை ஏற்பதற்கும், புனரமைப்புத் திட்ட நிதி உதவிகளை வழங்குவதற்கும், இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான நிர்வாகச் செலவினை மேற்கொள்ளவும் தேவையான நிதி ஆதாரத்திற்காகவும் புனரமைப்பு நிதியம் விரைவில் உருவாக்கப்படும்.

**11. கொள்கை செயல்படுத்துதலை கண்காணிப்பதற்கான அதிகாரமூட்டப்பட்டக் குழு**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் அரசாணை (நிலை) எண் 37, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை நாள் 3.6.2008 மூலம் கொள்கை செயல்படுத்துலை கண்காணிப்பதற்கான ஒரு அதிகார மூட்டப்பட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் அரசு முதன்மைச் செயலாளர், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை உள்ளிட்ட பல்வேறு அரசுத் துறை அலுவலர்கள் 10 பேர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இக்குழுவின் முதல் கூட்டம் மாண்புமிகு ஊரக தொழில் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 25.9.2008 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**12. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் வாரியம்**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் இதுவரை செயல்பட்டு வந்த சிறுதொழில் வாரியம், அரசாணை (டி) எண் 81, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை நாள் 11.9.2008 வாயிலாக "குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் வாரியம்" என மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் (ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை) இவ்வாரியத்தின் தலைவராகவும் அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் துணைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாரியத்தில் பல்வேறு மத்திய மற்றும் மாநில அரசு உயர்நிலை அலுவலர்கள் 17 பேர் அலுவல் சார் உறுப்பினர்களாகவும், மத்திய மற்றும் மாநில அரசு உயர் அலுவர்கள் 6 பேரும் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுனங்களின் சங்கங்களின் பிரதிநிதிகள் 12 பேரும் அலுவல்சாரா உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாரியத்தின் உறுப்பினர் செயலராகவும் அமைப்பாளராகவும் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வாரியம் 6 மாதத்திற்கு ஒரு முறை கூடி குறு சிறு மற்றும் நடுத்தர

நிறுவனங்களுக்கான கோரிக்கைகள் மற்றும் பிரச்சனைகளை ஆராய்ந்து அவற்றிற்குத் தகுந்த ஆலோசனைகளை வழங்கி அதன் பரிந்துரைகளை அரசுக்கு அளிக்கும். இவ்வாரியத்தின் முதல் கூட்டம் கடந்த 9.3.2009 அன்று மாண்புமிகு ஊரக தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

**13. பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)**

பாரத பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டம், 1993 ஆம் ஆண்டு அக்டோபர் 2 அன்று ஆரம்பிக்கப்பட்டு, படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த மைய அரசின் பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம் 31.3.2008 உடன் நிறைவடைந்து விட்டது.

இந்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைச்சகம், பாரதப் பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் கிராம வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் ஆகிய இரு திட்டங்களையும் இணைத்து முதல்தலைமுறை தொழில் முனைவோர்கள் குறுந்தொழில் உற்பத்தி மற்றும் சேவை நிறுவனங்களைத் துவங்க, தேசத்தின் 61–ஆவது சுதந்திர தினத்தன்று பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் என்ற ஊக்கத் தொகையுடன் கூடிய புதிய கடனளிப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சேவை நிறுவனம் தொடங்குவதற்கு ரூ.10 லட்சம் வரையிலும், உற்பத்தி நிறுவனம் தொடங்குவதற்கு ரூ.25 லட்சம் வரையிலும் ஒரு பயனாளி இத்திட்டத்தின் கீழ் கடன் பெறுவதற்கு தகுதியுள்ளவராவ;ர். இத்திட்டம் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைச்சகத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள ஒரு முனை வழிகாட்டு முகமையான காதி மற்றும் கிராம தொழில் ஆணையம் (KVIC) மூலம் செயல்படுத்தப்படுவதுடன் இத்திட்டத்தின் தேசிய அளவிலான ஒற்றை முகமையாக இது செயல்படும். மாநில அளவில், இத்திட்டம் மாநில காதி மற்றும் கிராமத் தொழில் ஆணையம், காதி மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம் மற்றும் மாவட்ட தொழில் மையங்கள் மூலம் வங்கிகள் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.இத்திட்டத்திற்கான வழிகாட்டுதல்களை குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைச்சகம், இந்திய அரசு, புது தில்லி வெளியிட்டுள்ளது.

பாரத பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் 2008–2009ஆம் ஆண்டிற்கான இலக்க குறியீடுகள் மற்றும் செயல்பாட்டு விவரங்கள் பின்வருமாறு:

| துறை | இலக்கு | | | ஒப்பளிக்கப்பட்டவை | | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | விளிம்பு தொகை (ரூபாய் இலட்சத்தில்) | வேலை வாய்ப்பு | எண்ணிக்கை | விளிம்பு தொகை (ரூபாய் இலட்சத்தில்) | வேலை வாய்ப்பு |
| தொழில் வணிகத் துறை | 1407 | 1688.09 | 14067 | 1040 | 1416.62 | 6342 |
| தமிழ்நாடு காதி மற்றும் கிராமத் தொழில் வாரியம் | 1055 | 1266.07 | 10549 | 110 | 189.61 | 1580 |
| தமிழ்நாடு காதி மற்றும் கிராமத் தொழில் ஆணையம் | 1055 | 1266.07 | 10549 | 422 | 1496.64 | 12470 |
| மொத்தம் | 3517 | 4220.23 | 35165 | 1572 | 3102.87 | 20392 |

### 14. ராஜீவ் காந்தி தொழில்முனைவோர் நட்புத் திட்டம்

இந்திய அரசு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் “ராஜீவ் காந்தி உத்யாமி மித்ரா யோஜனா“ என்ற தொழில் முனைவோர் நட்புத் திட்டத்தை உருவாக்கி உள்ளது. இதன் மூலம் முதல்தலைமுறை தொழில் முனைவோர்களுக்கு, புதிதாகத் தொழில் ஆரம்பித்து நடத்த வேண்டிய உதவிகளை அளித்து கைகொடுத்து உதவ இயலும். தொழில் முனைவோர் வளர்ச்சி நிறுவனம், சென்னை, மாநில அளவிலான தொழில் முனைவோர் பயிற்சி மையமாக மத்திய அரசால் வகை இரண்டின் கீழ் உள்ள பட்டியலில் இடம் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசு திட்ட நிதியிலிருந்து முதல் தலைமுறை தொழில்முனைவோர்களுக்கு கைகொடுத்து உதவும் பொருட்டு மான்ய உதவித் தொகையாக ரூ.21.14 இலட்சம் பெறப்பட்டுள்ளது.

### 15. குழும மேம்பாட்டுத் திட்டங்கள்
### அ. தொழில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டமானது மத்திய அரசின் வர்த்தக மற்றும் தொழில் அமைச்சகத்தின் கீழ் வரும் தொழில் கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறையால் பொது மற்றும் கூட்டாண்மை முறையில் அமைக்கப்படும் குழுமங்களின் தரமான அடிப்படைக் கட்டமைப்பை அமைப்பதற்காக செயல்படுத்தப்படுகிறது. திட்ட மதிப்பில் 75 விழுக்காடு வரை, அதிகபட்சமாக 50 கோடி வரை ஒவ்வொரு தொழில் குழுமத்திற்கும் உதவித் தொகையாக மத்திய அரசாங்கத்தால் வழங்கப்படுகிறது. மீதமுள்ள 25 விழுக்காட்டில் திட்ட மதிப்பில் 15 விழுக்காட்டிற்குக் குறையாமல் பயனாளி தொழிலகங்களின் பங்களிப்பாகவும் எஞ்சிய தொகை அந்தந்த தொழில் குழுமம் / தொடர்புடையவர்களின் பங்களிப்பாகவும் இருக்கும். இத்திட்டம் இந்திய நிறுவனங்கள் சட்டம் மற்றும் கூட்டாண்மை சட்டங்களின் கீழ் அமைக்கப்படும் சிறப்பு முகமைகள் மூலம் செயல்படுத்தப்படும். அந்த சிறப்பு முகமைகள் சம்பந்தப்பட்ட தொழில் தொடர்புடைய சங்கங்களால் தொடங்கப்படும்.

மைய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்ற 5 குழுமங்களின் விவரங்கள் பின்வருமாறு

| வ.எண் | குழுங்களின் பெயர் | திட்ட மதிப்பு | செலவிடப்பட்ட தொகை |
|---|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்) | |
| 1 | திருப்பூர் பின்னலாடை குழுமம், திருப்பூர் | 150.00 | 156.20 |
| 2 | வாகன உதிரிபாகங்கள் குழுமம், சென்னை | 39.96 | 27.75 |
| 3 | தானியம், பயறு, பருப்பு மற்றும் இழைகள் அரைத்தல் குழுமம், மதுரை | 47.49 | 35.99 |
| 4 | தோல் தொழில் குழுமம், ஆம்பூர் | 67.34 | 82.38 |
| 5 | பம்ப் மோட்டார் மற்றும் பவுண்டரி குழுமம், கோயமுத்தூர் | 56.30 | 54.12 |

இத்திட்டங்களின் மூலம் மேற்கூறப்பட்ட தொழில் குழுமங்களுக்கான கட்டமைப்பு பணிகளான சாலை, குடிநீர் விநியோகம் மற்றும் கழிவு நீரகற்று திட்டம், கழிவு நீர் சுத்திகரிக்கும் திட்டம், திடக்கழிவு, தகவல் தொழில் நுட்பம் மற்றும் தொலை தொடர்பு கட்டமைப்பு, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையம், பொது வசதி மையம், சந்தைப் படுத்துதலுக்கான கட்டமைப்பு மேலும் பல வசதிகள் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் மூலம் மொத்தம் 16,370 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் பயன்பெறும்.

**ஆ) குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் குழும மேம்பாட்டுத் திட்டம் (MSE-CDP)**
**(முன்னாள் சிறு தொழில் குழும மேம்பாட்டுத் திட்டம் - SICDP)**

இத்திட்டம் மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் அமைச்சகத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. மைய அரசின் உதவி ஒவ்வொரு குழும திட்டத்திற்கும் அதன் திட்டமதிப்பீட்டில் 80 விழுக்காடு அதிகபட்சமாக ரூ. 10 கோடி ஆகும். நிலையான சொத்துக்கள் வாங்கப்படாமலும் நிறுவப்படாமலும் இருக்கும் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள் உள்ளிட்ட மென் இடை நிகழ்வுத் திட்டத்திற்கு ரூ.10 இலட்சம் உள்ளடக்கியதாகும் (Soft Activities).

பதினோராவது ஐந்தாண்டு திட்டத்தில் அமைக்க இதுவரை 50 குழுமங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அதில் 13 குழும திட்டங்கள் மைய அரசின் வழிகாட்டிக் குழு மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேலும் 30 குழும திட்டங்கள் மைய அரசுக்கு பரிந்துரை செய்ய பரிசீலனை செய்யப்பட்டு அனுப்பப்பட உள்ளன. மேலும் 7 குழும திட்டங்களுக்கான பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| வ. எண் | குழுமத்தின் பெயர் | பங்களிப்பு | | | | | நிதி ஒதுக்கீடு | செலவிடப் பட்ட தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | திட்ட மதிப்பீடு | நடு வண் அரசு உதவி | தமிழக அரசு உதவி | சிறப்பு முகமை பங்களிப்பு | வங்கி | | |
| | | (ரூ. இலட்சத்தில்) | | | | | | |
| 1. | கௌமா (COWMA) கோயம்புத்தூர் | 288.2 | 99.00 | 16.52 | 172 .68 | -- | 58.26 | 58.26 |
| 2 | சேகோசர்வ் சேலம் | 498.00 | 398.00 | -- | 100.00 | -- | 4.00 | 4.00 |
| 3<br>4<br>5<br>6<br>7<br>8 | தீப்பெட்டி குழுமங்கள் (6 வளர்ச்சி மையங்கள்) ஸ்ரீவில்லிப் புத்தூர்<br>குடியாத்தம்<br>கழுகுமலை<br>விருதுநகர்<br>சாத்தூர்<br>கோவில்பட்டி | 156.00 x6 = 936.00 | 85.54x6 = 513.24 | 10.73x 6= 64.38 | 25.00x6= 150 | 34.73 x 6= 208.38 | 390.00 | 173.75 |
| 9 | பீங்கான் குழுமம் விருதாச்சலம் கடலூர் மாவட்டம் | 101.25 | 70.53 | | 17.73 | 13.00 | - | - |
| 10 | கயிறு குழுமம் சிங்கம்புணரி, சிவகங்கை மாவட்டம் | 853.20 | 500.00 | - | 153.20 | 200.00 | - | - |

மேலும், கீழே குறிப்பிடப்பட்ட 3 குழும திட்டங்களுக்கான மென் இடை நிகழ்வுக்கு மட்டும் மைய அரசு ஒப்புதலளித்துள்ளது.

1. மருத்துவ / கலவைகள் குழுமம், ஆலத்துார்
2. பொறியியல் குழுமம் ஈக்காட்டுத்தாங்கல், அம்பத்துார்
3. பிளாஸ்டிக் குழுமம் கிண்டி, ஈக்காட்டுத்தாங்கல், அம்பத்துார்

11வது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் 50 குழும திட்டங்கள் செயல்படும் நிலையில் 15.26 இலட்சம் நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு உருவாக்கப்படும்.

**16. ஒற□றைச்சாளர முறையின் கீழ் வழிகாட்டுச் சேவைகள்**

ஒவ□வொரு மாவட்டத்திலும் தகுதியுள□ள குறு, சிறு மற□றும் நடுத்தரத் தொழில□ நிறுவனங்கள், மாசுக்கட்டுப்பாடு வாரியம், தமிழ□நாடு மின□சார வாரியம், தீயணைப்புத் துறை, பொதுசுகாதாரத் துறை, உள□ளாட்சி அமைப்புகள□ மற□றும் ஏனைய துறைகளிடமிருந்து பெற வேண்டிய சட்டபூர்வமான அனுமதிகளை விரைவில□ பெற□றுத்தரும் ஒற□றைச்சாளர முகமைகளாக மாவட்டத் தொழில் மையங்□கள□ திகழ□கின□றன. குறு, சிறு மற□றும் நடுத்தரத்தொழில் கொள்கை 2008இல் அறிவிக்கப்பட்டுள□ளபடி, மாநிலம் மற□றும் மாவட்ட நிலைகளில் ஒற□றைச்சாளர குழுக்களை முறையான அமைப்பாக ஏற□படுத்தி, அனுமதி வழங்□குவதற□கும் மற□றும் அனுமதி வழங்□கப்பட்டதாக கருதப்படுவதற□கு உரிய கால அளவினை நிர்ணயிக்கவும் அதிகாரம் வழங்கும் தமிழ்நாடு தொழில் மேம்பாடு மற□றும் வசதியாக்கல் சட்டத்தை வடிவமைக்கும் பணிகளை அரசு மேற்கொண்டு வருகின்றது.

**17. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் வசதியாக்கக் குழுக்கள்**

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம், 2006 அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள், அவை விற்பனை செய்த பொருட்களுக்கு பெருந்தொழில் நிறுவனங்களிடமிருந்து வரவேண்டிய நிலுவைத் தொகைகளை விரைந்து பெற்றுத் தரும் நோக்குடன் அரசு, சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு மண்டலங்களில் குறு, மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான வசதியாக்கக் குழுக்களை அமைத்துள்ளது. இக்குழுக்கள் மூலம் 2008–2009 ஆண்டில் இம்மாநிலத்திலுள்ள 105 குறு, மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் காலதாமத பணப்பட்டுவாடா நேர்வுகள் தொடர்பாக 16 விவாதங்கள் நடத்தி 52 இனங்கள் மீது சுமுகமான தீர்வு மேற்கொள்ளப்பட்டு ரூ. 198.24 லட்சம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

**18. பரிசோதனை வசதிகள், பயிற்சி மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள்**

**அ) பரிசோதனைக் கூடங்கள்**

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்களுக்கு உதவி செய்யும் பொருட்டும் அவர்கள் உற்பத்தி செய்யும் மின் சாதனங்களைப் பரிசோதிக்கும் வசதிக்கெனவும் மற்றும் நுகர்வோர் நலன்களை பாதுகாக்கும் நோக்குடனும் இப்பரிசோதனைக் கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன.

**i. மின் பரிசோதனை மையங்கள்**

காக்களூர், மத்திய மின் ஆய்வுக் கூடம், இந்தியத் தர நிர்ணய மையம்(பி.ஐ.எஸ்), சோதனைக் கூடங்களுக்கான தேசிய அங்கீகாரக் குழுமம்(என்.எ.பி.எல்), ஆகியவற்றினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கு தரக்கட்டுப்பாடு பற்றிய ஆலோசனைகள் வழங்கும் நிலையமாகவும் இந்த ஆய்வுக் கூடம் விளங்குகிறது. ஏறக்குறைய 170 மின் மற்றும் மின்னணுச் சாதனங்கள் இந்திய தரக்குறிப்பேட்டின் வழிகாட்டுதலுக்கு இணங்க சோதனை செய்யப்படுகிறது. காம்பேக்ட் குழல் விளக்கு, ஸ்மார்ட் கார்டு ரீடர், தானியங்கி சக்தி சேமிக்கும் கருவி போன்றவை இவற்றில் அடங்கும். இதன் பயனாக இந்திய தர நிர்ணயக் குழுமம், மத்திய அரசின் பொருட்கள் வழங்கல் துறை, தரக் கட்டுப்பாட்டு மற்றும் தரக் குறியீடு நிறுவனங்கள், தனியார் உற்பத்தியாளர்கள், மத்திய அரசு / மாநில அரசுத் துறைகள் மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள் பெரிதும் பயனடைகின்றன.

பொது வசதி மையம், ஓசூர் அப்பகுதியிலுள்ள உற்பத்தியாளர்களின் மின் மற்றும் மின்னணு சாதனங்களின் தரத்தினை மேம்படுத்த சோதனை செய்யும் வசதியை அளிக்கிறது. இவ்விரு சோதனைக் கூடங்களில் 2008–2009ல் 5800 மின் பொருட்கள் மற்றும் சோதனை கட்டண வருவாய் ரூ.150 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 7521 மின்பொருட்கள் சோதனை செய்யப்பட்டு அதன் மூலம் ரூ.150.10 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**ii. இரசாயனப் பரிசோதனைக் கூடங்கள்**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான மூலப் பொருட்கள், உற்பத்திப் பொருட்கள் மற்றும் தயாரிப்பில் ஈடுபடுத்தப்பட்ட பொருட்கள் ஆகியவற்றைப் பரிசோதனை செய்வதற்காக இரசாயனப் பரிசோதனைக் கூடங்கள், சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்த பரிசோதனைக் கூடங்கள் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு சலுகைக் கட்டணத்தில் பரிசோதனை சேவைகளை அளித்து வருகின்றன. 2008–2009ல் 56,700 மாதிரிகள் சோதனை செய்தல் மற்றும் சோதனை கட்டண வருவாய் ரூ.120.75 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 57,819 மாதிரிகள் சோதனை செய்யப்பட்டு, ரூ.136.27 இலட்சம் சோதனை கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும், சென்னையிலுள்ள இரசாயன பரிசோதனைக் கூடத்தில், 20,000 இந்திய தர நிர்ணய குறிப்பேடுகள், 6,100 புத்தகங்கள் மற்றும் 14 சஞ்சிகைகளைக் கொண்ட ஒரு தொழில் நுட்ப நூலகம் உள்ளது.

### iii. மின் மற்றும் மின்னணு தொழில் தகவல் மையம், சென்னை

இம்மையம் டாக்டர் விக்ரம் சாராபாய் தொழிற் பேட்டை, திருவான்மியூர், சென்னையில் உள்ளது. மாநிலம் தழுவிய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்கள் (மின் மற்றும் மின்னணு) பயன்படுத்தும் வகையில் வாங்குவோர் மற்றும் விற்பனையாளர்கள் குறித்த தேவையான அடிப்படைத் தகவல்கள் அடங்கிய கையேடு பராமரிக்கப்பட்டுள்ளது. மேலும் குறிப்பிட்ட தொழில்களுக்காக தொழில் திட்ட குறிப்பேடுகளும் அளிக்கப்படுகிறது. தொழில் முனைவோரின் பயனுக்கென ஒரு சிறந்த தொழில் நுட்ப நூலகம் உள்ளது. இந்நூலகம் மின்சாரம், மின்னணுவியல், தகவல் தொடர்பு நுண்கருவிகள் சம்பந்தப்பட்ட 1400 புத்தகங்கள் மற்றும் 100 சஞ்சிகைகளைக் கொண்டுள்ளது.

### iv. தரக்கட்டுப்பாடு ஆணைகளின் அமலாக்கம்

தொழில் வணிக ஆணையரகத்தின் ஒரு பிரிவான "வீட்டு உபயோக மின் சாதனங்களின் தரக்கட்டுப்பாடு ஆணைகளைச் செயல்படுத்தும் மையம்" 1981–ஆம் ஆண்டு தரக் கட்டுப்பாட்டு ஆணை மற்றும் மின்கம்பிகள் மற்றும் வடங்கள், வீட்டு உபயோக பொருட்கள் மற்றும் மின் பாதுகாப்புக் கருவிகள் மற்றும் அதனைச் சார்ந்த பொருள்கள் (தரக்கட்டுப்பாடு) ஆணை 2003 ஆகிய இரண்டு ஆணைகளை அமல்படுத்துகிறது. மேற்கூறிய முதல் ஆணைக்கு எதிராக செயல்படுவது அத்தியாவசிய பொருட்கள் சட்டம் 1955இன்படி தண்டனைக்குரியதாகும். இரண்டாவது ஆணை மூலம் ஐ.எஸ்.ஐ. முத்திரை இல்லாத, குறிப்பிடப்பட்ட சில மின்பொருட்களைத் தயாரிக்கவும், அவற்றை விற்பனைக்குச் சேமிக்கவும் அல்லது விநியோகிக்கவும் தடை செய்துள்ளது. இந்த ஆணைக்கு எதிர்மாறாகச் செயல்படுவது பி. ஐ. எஸ். சட்டத்தின் கீழ் தண்டனைக்குரியதாகும். இந்த ஆணைகளை அமல்படுத்த "உரிய அலுவலர்" ஆக மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்களும் சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரை துணை இயக்குநர் (மின் மற்றும் மின்னணு), தரக்கட்டுப்பாட்டு மையம், சென்னை அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். 2008-09 ஆம் ஆண்டில் 855 மின் பொருள் விநியோகஸ்தர் மற்றும் விற்பனைக் கூடங்கள் சோதனை செய்யப்பட்டு விதி மீறல்களுக்காக நான்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

**ஆ. பயிற்சி நிலையங்கள்**

1. அரசின் தொழில்நுட்ப பயிற்சி மையம் கிண்டியில் மூன்றாண்டு பட்டயப் படிப்பு "கருவி மற்றும் அச்சுக்கலை" யிலும், மூன்றாண்டு பட்டயப்படிப்பு "குளிர்சாதனம் மற்றும் குளிர்ப்பதனியல் கலை"யிலும் மற்றும் ஓராண்டு மேல்–பட்டயப் படிப்பு (முதிர்வு நிலை) "அச்சு மற்றும் கருவி வடிவமைப்பு" துறையிலும், வருடத்திற்கு 30, 40 மற்றும் 10 மாணாக்கர்களை சேர்த்து முறையே இயங்கி வருகின்றது.

2. திண்டுக்கல்லிலுள்ள கருவிப் பொறியியல் மையத்தில் மூன்றாண்டு "கருவி மற்றும் அச்சுக்கலை" பட்டயப்படிப்பு வருடத்திற்கு 30 மாணாக்கர்களைச் சேர்த்து இயங்கி வருகின்றது.

3. விருத்தாச்சலத்திலுள்ள அரசினர் பீங்கான் தொழில்நுட்ப பயிற்சி மையத்தில் மூன்றரை வருட பட்டயப்படிப்பு வருடத்திற்கு 50 மாணாக்கர்களைச் சேர்த்து நடத்தப்பட்டு வருகின்றது.

4. அரசினர் அறிவியல் கண்ணாடி பயிற்சி மையத்தில் இரண்டு வருட சிறப்பு சான்றிதழ் பயிற்சியானது 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களுக்கு "அறிவியல் கண்ணாடிப் பொருட்கள் தயாரிப்பு" கலையில் வருடத்திற்கு 25 மாணாக்கர்களைச் சேர்த்து இயங்கி வருகின்றது.

மேற்படி பயிற்சி நிலையங்களில் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்கள் இந்தியா மற்றும் வெளிநாடுகளிலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் பெரிய நிறுவனங்களில் நல்ல வேலைவாய்ப்பினை பெற்றுள்ளனர்.

**19. அரசு தொழிற்பேட்டைகள்**

i. **பீங்கான் தொழிற்பேட்டை**

1964 முதல் விருத்தாச்சலம் அரசினர் பீங்கான் தொழிற்பேட்டை 64 தொழிற்கூடங்களுடன் செயல்பட்டு வருகின்றது. இங்குள்ள நிறுவனங்கள், குறைந்த மின்னழுத்த கடத்தாப்பொருட்கள், குளியலறை மற்றும் கழிவறை சாதனங்கள், கலைப்பொருட்கள், உயர் வெப்பம் தாங்கக் கூடிய செங்கற்கள் மற்றும் இதர உயர் வெப்பம் தாங்கக்கூடிய பொருட்களை தயாரிக்கின்றன.

ii. **மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டைகள்**

அரசு மின், மின்னணு மற்றும் அவை சார்ந்த தொழில்களுக்கென்றே மாநிலத்தில் எட்டு சிறப்பு தொழிற்பேட்டைகளை அமைத்துள்ளது. இந்த எட்டு தொழிற்பேட்டைகளில் இரண்டு சென்னையிலும் (திருவான்மியூர் மற்றும் பெருங்குடி) மற்றும் திருவள்ளூர் (காக்களூர்) மதுரை (கப்பலுார்), சேலம் (சூரமங்கலம்), கோயம்புத்துார் மாநகரம், கிருஷ்ணகிரி (ஓசூர்), திருச்சிராப்பள்ளி (துாவாக்குடி), இவ்வாறாக மாவட்டத்திற்கு ஒன்றாகவும் அமைக்கப்பட்டுள்ளன. இத்தொழிற்பேட்டைகளில் 517 மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் 140 தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சட்டப் பேரவையில் அறிவித்தபடி மேற்கண்ட 8 தொழிற்பேட்டைகளையும் மற்றும் விருத்தாசலத்திலுள்ள பீங்கான் தொழிற்பேட்டையையும் பராமரிப்புக்காக சிட்கோவிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கான பூர்வாங்க நடைமுறைகள் முடியும்வரை காத்திருக்காமல் இத்தொழிற்பேட்டைகள் விரைவில் சிட்கோ நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும்.

**20. தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம்**

இ.டி.ஐ (EDI) என்று அழைக்கப்படும் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் சிறு தொழில் அலகுகளின் தேவைகளை நிறைவு செய்ய ஒரு தனி நிறுவனம் அவசியம் என்ற நெடுநாள் தேவையை பூர்த்தி செய்யும்பொருட்டு 2001ம்ஆண்டில் ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கமாக தோற்றுவிக்கப்பட்டது. இம்மாநிலத்தில் தொழில் நிறுவனங்கள் அமைப்பதற்கான வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ளுவதும், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் எதிர்காலத் தேவைகளை பூர்த்தி செய்ய முன்வரும் தொழில்முனைவோர்களின் திறமைகளை வளர்த்து நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதும் இந்நிறுவனத்தின் முதன்மை நோக்கங்களாகும்.

இந்நிறுவனம் 2007–08ல் பாரதப் பிரதமர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 6175 பயனாளிகளுக்கும், தொழில்முனைவோர் விழிப்புணர்வு முகாம்கள் மூலம் 2007–08ல் 350 பேருக்கும் 2008–09ம் ஆண்டில் 753 பேருக்கும் பயிற்சியளித்துள்ளது. இந்நிறுவனம் 2007–08ல் பயிற்சியாளர்களுக்குக்கான பயிற்சி வகுப்பு நடத்தி அதில் 17 பேர்கள் பயனடைந்துள்ளனர். மேலும் பட்டியலிடப்பட்ட இனம் / பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (SC/ST) வகுப்பைச்சேர்ந்த 200 நபர்களுக்கு 2008–09 ம் ஆண்டில் இரு நாள் இலவச தொழில் முனைவோர் விழிப்புணர்ச்சி முகாம் நடத்தி பயிற்சியளித்துள்ளது. பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் இந்நிறுவனம் 2008–09ல் 49 பயனாளிகளுக்கு பயிற்சி அளித்துள்ளது. மேலும், இந்நிறுவனம், 2008–09ல் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 59 நபர்களுக்கு இரண்டு வார பயிற்சி அளித்துள்ளது.

**21. தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்**

தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிகத் துறை இயக்குநர் தமிழ்நாட்டின் தொழிற் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் ஆவார். தொழிற் கூட்டுறவு சங்கங்களின் பிரதான நோக்கம், பொருளாதாரத்தில் நலிவுற்ற கிராமப்புற கைவினைஞர்கள், தொழிலாளர்கள் மற்றும் கூலித் தொழிலாளர்களுக்கு பயனுள்ள தொடர் வேலைவாய்ப்பினை அளிப்பதாகும். மேலும் இச்சங்கங்கள் சிறு விவசாயிகள் பயிரிடும் தேயிலை மற்றும் மரவள்ளிக் கிழங்குக்கு நியாயமான விலை கிடைக்க உதவி புரிகின்றன. மேலும், குறு மற்றும் சிறு தொழில் முனைவோர்களுக்கு அவர்கள் தொழிற்சாலைகள் அமைப்பதற்கு உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகளையும், தொழில் கூடங்களையும், கூட்டுறவுத் தொழிற் பேட்டைகள் அளித்து வருகின்றன. தேயிலை, சவ்வரிசி, தீப்பெட்டி, கயிறு, பாலிதீன், கைவினைப் பொருட்கள், தையல், தொழிலாளர் ஒப்பந்த சேவை, அச்சகம், ஆட்டோ சேவை, பொறியியல், உலோகம், கூட்டுறவுத் தொழிற் பேட்டை மற்றும் சிறப்பு வகை சங்கங்களான இருளர் பாம்பு பிடிப்போர் தொழிற் கூட்டுறவு சங்கம் போன்ற வணிகப் பிரிவுகளில் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் செயல்படுகின்றன.

இத்துறையின் கீழ் தற்பொழுது 367 தொழிற் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 228 சங்கங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன. 2008–09 ஆம் ஆண்டு இத்தொழிற் கூட்டுறவு சங்கங்கள் ரூ.504.72 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளன. மேலும் இச்சங்கங்களின்

மூலமாக 1,01,894 நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி, ரூ.2136.48 லட்சம் கூலியாக வழங்கப்பட்டுள்ளது.

**22. தேயிலைப் பிரிவு**

நீலகிரி மாவட்டத்தில் 1961லிருந்து 15 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளும், 1965லிருந்து 2 தேயிலை சேவைச் சங்கங்களும் இயங்கி வருகின்றன. 15 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் சாலிஸ்பரி, பிதர்காடு மற்றும் பந்தலூார் ஆகிய இடங்களில் செயல்படுகின்ற 3 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளும் ISO – Hazard Analytical and Critical Control Point Certification – இடையூறு பகுப்பாய்வு மற்றும் முக்கியமான கட்டுப்பாட்டு பகுதி குறித்த பன்னாட்டுத் தர நிர்ணய அமைப்பின் தரச்சான்றிதழ் பெற்றுள்ளன. இரு தேயிலை சேவைச் சங்கங்களில், இன்ட்கோசர்வ் சேவை சங்கமானது ISO Certification – பன்னாட்டுத் தர நிர்ணய அமைப்பின் தரச்சான்றிதழ் பெற்றுள்ளது.

**23. கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள்**

தேயிலை பயிரிடும் சுமார் 20000 சிறு விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்டு நீலகிரி மாவட்டத்தில் இயங்கி வரும் 15 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளும் 2008–09ஆம் ஆண்டில் 562.13 இலட்சம் கிலோ பசுந்தேயிலையை தன் உறுப்பினர்களிடமிருந்து கொள்முதல் செய்து ரூ.9574.03 இலட்சம் மதிப்பிற்கு 148.98 இலட்சம் கிலோ தேயிலையை உற்பத்தி செய்து ரூ.9649.46 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளன. 2008–09ஆம் ஆண்டு கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் தன் உறுப்பினர் தேயிலை விவசாயிகளுக்கு கொள்முதல் செய்த பசுந்தேயிலைக்கு கிலோ ஒன்றிற்கு சராசரியாக ரூ.11.58ஐ அளித்துள்ளன.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள 15 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் 14 கூட்டுறவு தேயிலைச் தொழிற்சாலைகள் 2008–09ஆம் ஆண்டில் ரூ.4.57 கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளன. எபநாடு கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை, ரூ. 59.03 லட்சம் மதிப்பீட்டில் புதிய இயந்திரங்கள் நிறுவப்பட்டு விரைவில் தேயிலை உற்பத்தியை துவங்க உள்ளது.

தேயிலை பயிரிடும் சிறு விவசாயிகளின் நலனுக்காக நடப்பாண்டில் உற்பத்தி செய்யப்படும் தேயிலையின் தரத்தை உயர்த்தவும் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதற்கும் கூட்டுறவு தேயிலை தொழிலைப் புத்துயிரூட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 15 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளையும் நவீனப்படுத்துவதற்காக ரூ.10.53 கோடி மதிப்பீட்டிலான திட்டம் 2008இல் ஒப்புதல் அளிக்கப்பட்டு தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழக அரசு, இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகையில் 25 விழுக்காட்டினை தனது பங்குமூலதனமாகவும், 25 விழுக்காட்டினை கடன் தொகையாகவும் மொத்தம் ரூ.5.26 கோடியினை விடுவித்துள்ளது. மீதமுள்ள திட்டத் தொகையின் 50 விழுக்காட்டில் தேயிலை வாரியத்தின்

மானியமாக 25 விழுக்காடு பெறவும், மீதமுள்ள 25 விழுக்காட்டினை வங்கிக் கடன் மூலம் திரட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் இயந்திரங்கள் நவீனமயமாக்கப்பட்டு, தரமான தேயிலை தூள் உற்பத்தி செய்யப்பட்டு, அதன் மூலம் சிறு தேயிலை விவசாயிகளுக்கு ஆதாயகரமான பசுந்தேயிலை விலை கொடுக்க ஏதுவாக இருக்கும்.

**24. இண்ட்கோசர்வ்**

1965ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழ்நாடு தேயிலை சிறு விவசாயிகள் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளின் இணையம் (இண்ட்கோசர்வ்), தமிழ்நாட்டில் உள்ள நியாய விலைக் கடைகள் மூலம் 'ஊட்டி டீ'யை விற்பனை செய்து வருகிறது. இண்ட்கோசர்வ், பெருமளவில் நீலகிரி தேயிலையை 'ஊட்டி டீ' விற்பனைக்காக கொள்முதல் செய்வதன் மூலம் தேயிலைச் சந்தையில் நீலகிரி தேயிலைக்கு உள்ள தேவையை நிலைநிறுத்தவும் பொது மக்களுக்கு நியாயமான விலையில் தேயிலை கிடைக்கவும் உறுதி செய்கிறது. 2008–09ஆம் ஆண்டில் இன்ட்கோசர்வ் 22.59 இலட்சம் கிலோ தேயிலையை ரூ.2811.32 இலட்சம் மதிப்பீட்டிற்கு விற்பனை செய்து நிகர இலாபமாக ரூ.25.60 இலட்சம் ஈட்டியுள்ளது.

இராணுவத்தினரின் தேயிலை நுகர்வுக்காக, மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இராணுவ கொள்முதல் நிறுவனத்தின் ஒப்பந்த புள்ளியினை இரண்டாவது முறையாக வெற்றிகரமாக பெற்றுள்ளது. 2008–09ம்ஆண்டில் இன்கோசர்வ் பாதுகாப்பு அமைச்சகத்திற்கு, ரூ.6.24 கோடி மதிப்பிலான 845 மெட்ரிக் டன் தேயிலையை விற்பனை செய்துள்ளது. மீண்டும் இதே ஆண்டில் ரூ.5.57 கோடி மதிப்பிலான 600 மெட்ரிக் டன் தேயிலையை விற்பனை செய்வதற்கான கொள்முதல் ஆணையை இண்ட்கோசர்வ் பெற்று விற்பனை செய்துள்ளது.

**25. தேயிலை உற்பத்தியாளர் சேவை கூட்டுறவு சங்கம் (டீ சர்வ்)**

தேயிலை விற்பனையில், வெளிப்படையான தேயிலை விற்பனையை உறுதி செய்யவும் விற்பனை மூலம் தேயிலை உற்பத்தியாளர்களின் தேயிலைக்கு நியாயமான விலை கிடைக்கவும் தேயிலை விற்பனையில் இடைத்தரகர்களை நீக்கவும் 'டீசர்வ்' என்றழைக்கப்படும் மின்னணு ஏல மையம் குன்னூரில் 28.8.2002இல் கூட்டுறவு சங்கமாக பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகிறது. 2008–09ஆம் ஆண்டு இந்த ஏல மையம் ரூ.9751.22 இலட்சம் மதிப்பிலான 15147 மெட்ரிக் டன் தேயிலையை விற்பனை செய்து ரூ.1.89 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

**26. கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்கள்**

10557 உறுப்பினர்களைக் கொண்டு 76 கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. இதன் மொத்த பங்குமூலதனம் ரூ.277.17 இலட்சம் ஆகும். இதில் அரசு பங்குமூலதனம் ரூ.223.25 இலட்சமும் அடங்கும். 2008–09ஆம் ஆண்டில், இச்சங்கங்கள் ரூ.10.91 கோடி மதிப்பீட்டிற்கு கயிறு பொருட்களை விற்பனை செய்துள்ளன. கயிறு சங்கங்களின் மூலமாக 1491 நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டு, கூலியாக ரூ.131.78 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**கயிறு கூட்டுறவு அமைப்புக்கு சந்தை மேம்பாட்டு உதவி திட்டம்**

கயிறு கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கயிறு தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிப்பதற்காக, சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் கயிறு பொருட்களின் விற்பனை விலையில் 10 விழுக்காடு அளவிற்கு குறைத்து விற்கப்படுகிறது. இதனை நடுவண் அரசால் (கயிறு வாரியத்தின் மூலம்) செயல்படுத்தப்படும் சந்தை மேம்பாட்டு உதவி திட்டத்தின் மூலம் ஈடு செய்யப்படுகிறது. இத்திட்டத்தின்படி, கயிறு சங்கங்களின் முந்தைய 3 ஆண்டு கயிறு பொருட்களின் சராசரி விற்பனை மதிப்பில் 10 விழுக்காடு மானியமாக அனுமதிக்கப்படுகிறது. இந்த 10 விழுக்காடு மானியத் தொகையை மாநில அரசும், நடுவண் அரசும் சம அளவில் ஏற்றுக் கொள்கின்றன.

இதன் அடிப்படையில் 2008-09 ஆம் ஆண்டிற்கு மாநிலத்தில் கயிறு பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்துள்ள 63 கயிறு சங்கங்களுக்கு நடுவண் அரசு ஒதுக்கீடு செய்துள்ள சந்தை மேம்பாட்டு நிதிக்கு சமமாக மாநில அரசும், அரசாணை எண்.(டி) 126 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (எ) துறை நாள் 31.12.2008 மூலம் ரூ.40 இலட்சத்தை அனுமதித்து, விடுவித்துள்ளது.. இதற்கு இணையாக, கயிறு வாரியமும் ரூ.40 லட்சத்தை தனது பங்காக அனுமதித்து, விடுவித்துள்ளது.

**27. கயிறு – பாரம்பரிய தொழில்களை புத்துயிரூட்டும் திட்டம் (ஸ்பர்ட்டி – SFURTI)**

ஸ்பர்ட்டி திட்டத்தின் கீழ் கடலூர், சேலம், சிங்கம்புணரி, பெரியகுளம், பட்டுக்கோட்டை மற்றும் குடியாத்தம் ஆகிய 6 கயிறுக் குழுமங்கள் தேர்வு செய்யப்பட்டு அப்பகுதியில் கயிறு தொழிலில் ஈடுபட்டு வரும் கயிறு தொழிலாளர்கள் / கயிறு தொழில் முனைவோர்கள் பயன் பெறும் வகையில் ஒவ்வொரு குழுமத்திற்கும் தலா ரூ.88.50 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.531 இலட்சம் மதிப்புள்ள திட்டத்திற்கு கயிறு வாரியத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஆறு கயிறு குழுமங்களும் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்குத் தேவையான சிறப்பு நோக்கு நிறுவனத்தைப் பதிவு செய்தும் உரிய இடத்தை தேர்வு செய்தும் உள்ளன. பயனாளிகள் செலுத்த வேண்டிய பங்குத் தொகையின் சுமையைக் குறைப்பதற்காக தமிழக அரசு ஆறு குழுமத்திற்கும் மொத்தம் ரூ.59.50 இலட்சம் கடனாக வழங்க ஒப்புதல் அளித்து, தொகைகள் குழுமங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது, திட்டத்தின் முக்கிய அம்சமாக பொது வசதி மையம் அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**28. கயிறு – புத்துயிரூட்டுதல் நவீனப்படுத்துதல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு (ரிமோட்)**

கயிறு வாரியத்தின் மூலம் மத்திய அரசின் ரிமோட் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 11ஆவது ஐந்தாண்டு திட்ட காலத்தில், இத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 1136 கயிறு தொழிலகங்கள் பயன்பெற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கயிறு திரிக்கும் தொழிலகங்களுக்கு தலா ரூ.2.00 இலட்சம் வரையும் சிறு / குடிசைத் தொழில் கயிறு தொழிலகங்களுக்கு தலா ரூ.5.00 இலட்சம் வரையும் திட்டங்களுக்கு கயிறு வாரியம் அனுமதித்துள்ளது. இதில் ஒவ்வொரு கயிறு அலகுக்கும் மத்திய அரசின் (கயிறு வாரியத்தின்) மானியத் தொகை 40 விழுக்காடு ஆகும். மேலும் கயிறு வாரியம், கயிறு அலகுகளுக்கு வங்கிகளில் கடன் உதவி பெறுவதற்கும் உதவி செய்கிறது. 2007–08ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் ரூ.962.00 இலட்சம் மதிப்பீட்டிலான திட்டங்கள் 220 கயிறுத் தொழிலகங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு மத்திய அரசு மானியத் தொகையாக ரூ.372.00

இலட்சத்தினை கயிறு வாரியம் விடுவித்துள்ளது. 2008–09ஆம் ஆண்டு ரிமோட் திட்டத்தின் கீழ் 219 தொழிலகங்களுக்கு ரூ.942 இலட்சம் அளவில் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. இதில் கயிறு வாரியத்தின் மானியம் ரூ.376.80 இலட்சம் ஆகும்.

**29. சேகோசர்வ்**

"சேகோசர்வ்" என்று அழைக்கப்படும் சேலம் கிழங்குமாவு மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் 21.7.1981ல் பதிவு செய்யப்பட்டு தனது உறுப்பினர்களான கிழங்கு மாவு மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் கிழங்கு மாவு மற்றும் சவ்வரிசியினை பொது ஏல முறையில் விற்பனை செய்து நியாயமான விலை கிடைப்பதற்கு வழி செய்கிறது. 2008–09ஆம் ஆண்டில் இச்சங்கம் ரூ.248.52 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்து ரூ.2.07 கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

இதன் உறுப்பினர்களின் உற்பத்தி அலகுகளை நவீனப்படுத்துவதற்காக ஒரு புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சேகோசர்வ் தனது ஒவ்வொரு உறுப்பினர் சேகோ அலகும் தனது இயந்திரங்களை நவீனப்படுத்த ஆகும் செலவுத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.4 இலட்சத்தினை மானியமாக விடுவிக்கும். இத்தொகையில் ஒவ்வொரு அலகுக்கும் மாநில அரசு 50 விழுக்காடு அல்லது ரூ.2 இலட்சத்திற்கு மிகாமல் சேகோசர்விற்கு திருப்பி அளிக்கும். 2006-07 ஆம் ஆண்டில் மாநில அரசு விடுவித்த மானியத் தொகை ரூ.50 இலட்சம், 54 தொழிலகங்களுக்கு முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு விட்டது.

**30. சேகோ குழுமம்**

சேலம் மற்றும் நாமக்கல் பகுதிகளில் இயங்கி வரும் கிழங்குமாவு மற்றும் சவ்வரிசி தொழிலகங்களின் மேம்பாட்டிற்காக குறு சிறு நிறுவனங்களுக்கான குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.498 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு திட்டம் மைய அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளது. சேலம் சேகோசர்வால் செயல்படுத்தப்படும் இக்குழும மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக பொது வசதி மையமாக ஓர் ஆய்வகம் அமைப்பதற்கு ரூ.120 இலட்சம் மானியமும் மென் இடையீடாக ரூ.10 இலட்சம் மானியத் தொகையை மைய அரசு அனுமதித்துள்ளது. மேலும் கூடுதலாக மென் இடையீடாக ரூ.4.00 இலட்சத்தினை மைய அரசு விடுவித்துள்ளது. பொது வசதி மையம் திட்டத்தின் கீழ் பகுப்பாய்வு கூடம் அமைப்பதற்கு தேவையான உபகரணங்கள், இயந்திரங்கள் ஆகியவைகளை கொள்முதல் செய்வதற்கு முடிவு செய்யப்பட்டு, இதற்கான நிதியினை வழங்குமாறு மைய அரசிடம் கோரப்பட்டுள்ளது.

**31. செங்கல் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவு சங்கங்கள்**

மாநிலத்தில் உள்ள ஏழை ஆதிதிராவிடர் செங்கல் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் 6 செங்கல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவற்றின் மூலம் 956 உறுப்பினர்கள் பயன் அடைந்து வருகின்றனர். இச்சங்கங்களின் மொத்த பங்கு மூலதனம் ரூ.7.08 இலட்சத்தில் அரசு பங்கு மூலதனம் ரூ.2.14 இலட்சமும் அடங்கும். 2008–09ஆம் ஆண்டில் இச்சங்கங்கள் ரூ.108.54 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளன.

**32. பாலிதீன் தொழிற் கூட்டுறவு சங்கங்கள்**

924 பெண் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையில் 12 பாலிதீன் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. இந்த பாலிதீன் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் வனத்துறை மற்றும் விவசாயத் துறைகளுக்கு பாலிதீன் பைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகின்றன. 2008–09 ஆண்டில் இச்சங்கங்கள் ரூ.167.61 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளன.

**33. ஆட்டோ சேவை கூட்டுறவு சங்கங்கள்**

ஆட்டோரிக்ஷா தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும், அவர்களுக்கு வழங்கிய ஆட்டோ கொள்முதல் கடனை தவணைகளில் வசூல் செய்தபின் அவர்களையே ஆட்டோ உரிமையாளர்களாக ஆக்கும் நோக்கத்துடனும் ஆட்டோ சேவை கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 53 ஆட்டோ சங்கங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 15 ஆட்டோ சங்கங்கள் சிறுபான்மையினத்தைத் சேர்ந்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் டாம்கோ (தமிழ்நாடு சிறுபான்மையினர் மேம்பாட்டு கழகம்) திட்டத்தின் கீழ் 6 விழுக்காடு வட்டி விகிதத்தில் இது வரை 645 ஆட்டோரிக்ஷாக்கள் சிறுபான்மையின உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**34. அச்சக சேவை கூட்டுறவு சங்கங்கள்**

அச்சுத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடனும், சிறு அச்சக உரிமையாளர்களுக்கு அச்சுப் பணிகளைப் பெற்றுத் தரும் நோக்கத்துடனும் அச்சகக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் அரசுத் துறை, அரசு சார்பு நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து அச்சுப் பணி ஆணைகள் பெற்று அவற்றினை தங்களது உறுப்பினர் அச்சகங்கள் மற்றும் தொழிலாளர்கள் மூலம் நிறைவேற்றி வருகின்றன. தற்பொழுது 29 அச்சக சேவை சங்கங்களும் 3 அச்சக தொழிலாளர் சங்கங்களும் இயங்கி வருகின்றன. 2008–09 ஆண்டில் இச்சங்கங்கள் ரூ.1856.55 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளன.

**35. தொழிலாளர் ஒப்பந்தச் சேவைக் கூட்டுறவு சங்கங்கள்**

தனியார் ஒப்பந்தக்காரர்களால் தொழிலாளர்கள் நசுக்கப்படுவதிலிருந்து பாதுகாக்கவும், அமைப்புச் சாரா தொழிலாளர்களை வரையறுக்கப்பட்ட அமைப்பின் கீழ் கொண்டுவரவும் ஒப்பந்த சேவைக் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் தற்போது 39 தொழிலாளர் சேவை கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. மேலும் இதன் உறுப்பினர்களாகிய தொழிலாளர்களுக்குரிய சட்டப்பூர்வமான சலுகைகளை அளித்து வருகின்றன. 2008–09 ஆண்டில் இச்சங்கங்கள் ரூ.2082.77 இலட்சம் மதிப்பிற்கு சங்க உறுப்பினர்களுக்குக் கூலியாக வழங்கியுள்ளன.

**36. கூட்டுறவுத் தொழிற் பேட்டைகள்**

இத்துறை 2204 குறு மற்றும் சிறு தொழில் முனைவோர்களை உறுப்பினர்களாகக் கொண்டு பல்வேறு மாவட்டங்களில் 12 கூட்டுறவுத் தொழிற் பேட்டைகளை அமைத்துள்ளது. இத் தொழிற் பேட்டைகளின் நோக்கம் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள், தொழிற் கூடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் அளித்து அவர்களின் தொழில் மேம்பாடு அடையச் செய்வதாகும். கோவை மாவட்டத்தில் உள்ள அண்ணா கூட்டுறவு தொழிற்பேட்டையில் பல ஆண்டுகளாக மனைகள் உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படாத நிலையில் இருந்து வந்தது. இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர் இப்பணிகள் முடுக்கிவிடப்பட்டு, 2008–09ஆம் ஆண்டில் அதாவது 5.10.2008ஆம் நாளன்று 514 மனைகள் பிரிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு தற்காலிக ஒதுக்கீடு (Provisional) செய்யப்பட்டுள்ளது. மேலும், இத்தொழிற்பேட்டை அனைத்து கடன்களை செலுத்தி, 2008–09 ஆம் ஆண்டு முதல் இலாபத்தில் இயங்கி வருகிறது.

**37. சென்னை தொழிற் கூட்டுறவு பகுப்பாய்வு நிலையம், சென்னை (மைகால்)**

சென்னை தொழிற் கூட்டுறவு பகுப்பாய்வு நிலையம் (மைகால்) தனது உறுப்பினர்களான மருந்து உற்பத்தி நிறுவனங்களின் மாதிரிகளையும் உற்பத்திப் பொருட்களையும் பகுப்பாய்வு செய்து அவற்றிற்கென நிர்ணயிக்கப்பட்ட தரத்தின் அளவீடுகளை ஆய்வு செய்து ஆய்வுச் சான்றிதழ்களை வழங்கி வருகிறது. மைக்கால் சங்கத்தின் குன்னூார் பகுப்பாய்வு மையம் ஐ.எஸ்.ஓ சான்றிதழ் பெற்றுள்ளது 2008–09 ஆண்டில் இச்சங்கம் ரூ.43.90 இலட்சத்தினை சேவைக் கட்டணமாக ஈட்டியுள்ளது.

**38. இருளர் பாம்பு பிடிப்போர் தொழிற் கூட்டுறவு சங்கம்**

இச்சங்கம் 1979ஆம் ஆண்டு 345 உறுப்பினர்களுடன் ரூ.11.03 இலட்சம் பங்கு மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 232 உறுப்பினர்கள் பாம்பு பிடிப்பதில் ஈடுபட்டுள்ளனர். இச்சங்கம் பாம்புகளிடமிருந்து விஷத்தை எடுத்து ஆய்வு நிறுவனங்களுக்கும் மருந்தகத் தொழிலகங்களுக்கும் பாம்புக் கடி விஷ முறிவு மருந்தினை தயாரிக்க விற்பனை செய்து வருகிறது. இச்சங்கம் 2008–09–ஆம் ஆண்டு ரூ.56.41 இலட்சத்தினை இலாபமாக ஈட்டியுள்ளது.

மேலும், தீப்பெட்டி, பொறியியல், கரி மற்றும் கல்கரி, தோல் பதனிடுதல் சேவை மற்றும் சிறப்பு வணிக வகைகளைக் கொண்ட 45 பதிவு செய்யப்பட்ட தொழிற் கூட்டுறவு சங்கங்களும் இத்துறையின் கீழ் இயங்கி வருகின்றன.

**39. தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி (தாய்கோ வங்கி)**

தொழிற் கூட்டுறவு சங்கங்களின் கடன் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக 1961ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி ஆரம்பிக்கப்பட்டது. நபார்டு மறு நிதி உதவித் திட்டத்தினை இவ்வங்கி தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் மூலம் செயல்படுத்த மத்திய ரிசர்வ் வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வங்கி சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்களுக்கு நிதி உதவி அளித்து வருகிறது. இவ்வங்கி, அரசுத் துறை மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு தனி நபர் கடன், நகைக் கடன், வீட்டுக் கடன், வீட்டு அடமானக் கடன் போன்ற சேவைகளை அளித்து வருகிறது. 2008–09 ஆண்டில் இவ்வங்கி ரூ.352.63 கோடி வைப்புத் தொகையாக திரட்டி ரூ.282.64 கோடி கடன் மற்றும் முன் பணம் அளித்து ரூ.4.37 கோடி இலாபம் ஈட்டியுள்ளது. 2008–09ஆம் ஆண்டில் 34 கிளைகளுடன் இயங்கி வந்த வங்கி, தற்பொழுது விழுப்புரம், பெரம்பலூர், நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் புதிய கிளைகளை தொடங்கி மொத்த கிளைகள் 38 ஆக உயர்ந்துள்ளது.

**தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)**

**40.** தமிழ் நாட்டில் சிறு மற்றும் குறு தொழில்களை வளர்க்கும் நோக்கத்துடன் ஒரு அரசு நிறுவனமாகத் தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் 1970 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தமிழக அரசு இம்மாநிலத்தில் முதன் முறையாக 35 தொழிற்பேட்டைகளை நிறுவியது. பின்பு அவற்றை 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு மாற்றம் செய்து இந்த 35 அரசு தொழிற்பேட்டைகளையும் முகமை அடிப்படையில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் நிருவகிக்க தமிழக அரசு ஆணை வழங்கப்பட்டது. இந்த 35 அரசுத் தொழிற்பேட்டைகளைத் தவிர, தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் சொந்தமாக 43 தொழிற்பேட்டைகளையும் தமிழகத்தில் நிறுவி மொத்தமாக 78 தொழிற்பேட்டைகளைத் தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் நிருவகித்து வருகிறது.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தொடங்கும் வாய்ப்புகளை அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்தும் வகையில் மேலும் புதியதாக 22 தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இப்புதிய தொழிற்பேட்டைகளில் 11 தொழிற்பேட்டைகளில் உள்கட்டமைப்பு வசதிகளுடன் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன மற்றும் 3 தொழிற் பேட்டைகளுக்கான உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 8 புதிய தொழிற்பேட்டைகளுக்கான நிலங்கள் கையகப்படுத்தும் பணிகள் வெவ்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

தற்பொழுதுள்ள 78 தொழிற்பேட்டைகளிலும் இதுவரை 5,596 மேம்படுத்தப்பட்ட மனைகளையும், 4,385 தொழிற்கூடங்களையும் உருவாக்கி 6,774 தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. இதன் மூலம் சுமார் 2.24 இலட்சம் நபர்களுக்கு இத்தொழிற்பேட்டைகளில் நேரடி வேலை வாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது. இத்தொழிற்பேட்டைகளில் இயங்கும் உள் நாட்டு வணிகத்தில் ஈடுபட்டுள்ள தொழில் நிறுவனங்களின் ஆண்டின் மொத்த விற்பனை ரூபாய் 11,433 கோடியாகும். ஏற்றுமதி வணிகத்தில் ஈடுபட்டுள்ள தொழில் நிறுவனங்களின் ஆண்டின் மொத்த விற்பனை ரூபாய் 3,112 கோடியாகும். மேலும் கடந்த நிதியாண்டு முதல் உருவாக்கப்பட்டு வரும் 22 புதிய தொழிற்பேட்டைகளின் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கென 2,226 மேம்படுத்தப்பட்ட மனைகள் உருவாக்கப்படும். இதன் மூலம் சுமார் 10,000 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு கிடைக்கும் வாய்ப்புள்ளது

**41. தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் செயல்பாடுகள் :–**

1. புதிய தொழிற்பேட்டைகளை நிறுவுதல்
2. தற்பொழுது இயங்கும் தொழிற்பேட்டைகளை மேம்படுத்துதல்
3. மூலப்பொருட்கள் விநியோகித்தல்
4. சந்தைப்படுத்துதலில் உதவி அளித்தல் ஆகியவையாகும்.

**41.1** தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முதன்மைச் செயல்பாடு, சாலைகள், சாலை விளக்குகள், தண்ணீர் விநியோகம், மழை நீர் வடிகால் வசதி, கால்வாய்கள் முதலான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய தொழிற்பேட்டைகளை உருவாக்குவதாகும். இத்தொழிற் பேட்டைகளில், 8 சென்ட், 15 சென்ட், 25 சென்ட், 50 சென்ட் மற்றும் 1 ஏக்கர் என பல்வேறு பரப்பளவு உள்ள மனைகள் ஏற்படுத்தப்படும். இம் மனைகளைத் தவணை முறையிலும், ஒட்டுமொத்த விற்பனை முறையிலும் தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஒதுக்கீடு செய்கிறது. ஒதுக்கீடு செய்வதற்காகப் பின்பற்றப்படும் வழிமுறைகள் பின்வருமாறு:–

ஆண்டுதோறும் காலியாக உள்ள மனைகள் மற்றும் தொழிற் கூடங்கள் குறித்த விபரங்கள் செய்தித்தாள்களில் விளம்பரப்படுத்தப்பட்டு, ஒதுக்கீட்டிற்காகத் தொழில் முனைவோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப் படுகின்றன. பெறப்பட்ட விண்ணப்பங்கள் தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், தொழில் மற்றும் வணிக இயக்ககம் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகியவற்றின் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு சிறு தொழில் சங்கத்தின் (டான்ஸ்டியா) பிரதிநிதி ஆகியவர்கள் அடங்கிய தேர்வுக் குழுவால் ஆய்வு செய்யப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள், தேர்வுக்குழுவின் முன்பு தோன்ற அழைக்கப்பட்டு, தேர்வுக்குழுவினரால் நேர்காணல் செய்யப்பட்டுத் தகுதியுள்ள மற்றும் குறிப்பிட்ட அளவு நிலம் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்கள் தகுதியின் அடிப்படையில் ஒதுக்கீட்டிற்காகத் தேர்வு செய்யப்படுகின்றன. பிறகு தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் முன்னிலையில், மனைகளின் எண்கள் ஒளிவு மறைவற்ற குலுக்கல் முறையில் தேர்வுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தொழிற் பேட்டைகளில் ஒதுக்கீடுகள் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரால் வழங்கப்படுகின்றன. அதேபோல் அரசுத் தொழிற்

பேட்டைகளில் 5000 ச.அடி பரப்பளவுக்கு உட்பட்ட ஒதுக்கீடுகளுக்குத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரால் ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கப்படுகின்றன. அரசு தொழிற்பேட்டைகளில் 5000 ச.அடி பரப்பளவுக்கு மேற்பட்ட ஒதுக்கீடுகளுக்கு, அரசாணை எண் 877 தொழில் துறை நாள் 1.7.1982 ன் படி, அரசின் முன் அனுமதிபெற்று, ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கப்படுகின்றன.

**41.2 மனைகள் மற்றும் தொழிற் கூடங்கள் விற்பனை**

2008–09ஆம் ஆண்டில் தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் 1083 மனைகள் மற்றும் 14 தொழிற் கூடங்களை விற்பனை செய்துள்ளது. 2009–10 ஆம் ஆண்டில் தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் பல்வேறு தொழிற்பேட்டைகளில் 802 மனைகளை உருவாக்கவும் 1531 மேம்படுத்தப்பட்டத் தொழில் மனைகள் மற்றும் 29 தொழிற் கூடங்களை ஒதுக்கீடு செய்து விற்பனை செய்யவும் உத்தேசித்துள்ளது.

2007–08 ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட்டமனைகள் மற்றும் தொழிற்கூடங்களை ஒதுக்கீடு செய்து விற்பனை செய்ததன் மூலம் இந்நிறுவனம் ரூபாய் 848.44 இலட்சம் (வரி செலுத்தலுக்கு முன்னதான) இலாபமாக ஈட்டியுள்ளது. 2008–09ல் உத்தேச இலாபமாக ரூ.1212.64 இலட்சம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**42. இயங்கிவரும் தொழிற்பேட்டைகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல்**

மைய அரசின் பல்வேறு திட்டங்களான ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்(IID), மைய அரசின் கூடுதல் உதவித் திட்டம் (ACA), தொழில் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்(IIUS), மற்றும் ஏற்றுமதிக்கான உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக மாநில அரசுக்கு உதவும் திட்டம்(ASIDE) ஆகியவைகளின் கீழ் நிதி உதவி பெறுகிறது. இத்திட்டங்கள், மைய அரசு, மாநில அரசு, பயனீட்டு அலகுகள் மற்றும் சிட்கோ நிறுவனம் ஆகியவற்றின் பங்களிப்புடன் நிறைவேற்றப்படுகின்றன.

**42.1 குறு, சிறு நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டம் (முந்தைய ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (IID) )**

**42.1.1** கோவில்பட்டி, காக்களூர் (பகுதி–1), முகுந்தராயபுரம், ஊட்டி, ஆலத்தூர் மற்றும் ஆத்தூர் (கரூர்) ஆகிய ஆறு இடங்களில் இயங்கி வரும் தொழிற் பேட்டைகளில் 2008–09 ஆம் ஆண்டில் ரூ. 1401.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் ரூபாய் 560.40 இலட்சம் மைய அரசின் நிதி உதவியும் , ரூபாய் 560.40 இலட்சம் மாநில அரசு நிதி உதவியும், மீதி ரூபாய் 280.20 இலட்சம் பயனாளிகளின் பங்களிப்பும் அடங்கும்.

குறிச்சி (கோயம்புத்தூர்), முகுந்தராயபுரம் (வேலூர்) மற்றும் ஊட்டி ஆகிய இடங்களில் உள்ள தொழிற்பேட்டைகளை மேம்படுத்துவதற்கான செயற்குறிப்புகளுக்கு மைய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளதுடன் ரூபாய் 82.98 இலட்சம் மானியமாக வழங்க ஒப்பளித்துள்ளது. அத்தொகைக்கு ஈடான ரூ.82.98 இலட்சம் மாநில அரசு மானியமாக வழங்கியுள்ளது. இவற்றில் ஆகஸ்டு , 2009ல் பணிகள் தொடங்கப்படும்.

ஆலத்தூர் (காஞ்சிபுரம்), ஆத்தூர் (கரூர்), கோவில்பட்டி மற்றும் காக்களூர் (பகுதி 1) (திருவள்ளூர்) ஆகிய தொழிற்பேட்டைகள் மேம்படுத்தும் பணிகளுக்கான முன்மொழிவுகள் இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கியின் (SIDBI) கூர்ந்தாய்விற்குப்பின் மைய அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மைய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

**42.1.2** திருவெறும்பூர், மேட்டூர், சிவகங்கை (பகுதி–1), காரைக்குடி (பகுதி–1), மார்த்தாண்டம் மற்றும் கும்மிடிப்பூண்டி ஆகிய ஆறு தொழிற்பேட்டைகளில் **2009–10** ஆம் ஆண்டில் உள்கட்டமைப்பு வசதிகள் ரூபாய் **764** இலட்சம் திட்ட மதிப்பீட்டில் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதில் ரூபாய் **305.60** இலட்சம் மைய அரசின் நிதி உதவியும், ரூபாய் **305.60** இலட்சம் மாநில அரசு நிதி உதவியும், மீதி **152.80** இலட்சம் பயனாளிகளின் பங்களிப்பும் ஆகும்.

### 42.1.3 கிண்டி தொழிற்பேட்டை அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் (GIEIUC)

கிண்டி தொழிற்பேட்டையில் சுமார் ரூ.**2794.50** இலட்சம் திட்ட மதிப்பில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை கிண்டி தொழிற்பேட்டை உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் (GIEIUC) என்ற சிறப்பு நோக்கு நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. மொத்த திட்ட மதிப்பீட்டில் ரூபாய் **1712** இலட்சம் மைய அரசின் நிதிஉதவியாகவும், மாநில அரசின் நிதி உதவி ரூபாய் **200** இலட்சமாகவும், சென்னை மாநகராட்சியின் சொத்து வரிப் பங்கீடாக ரூபாய் **320** இலட்சமும், மீதித்தொகை பயனாளிகளின் பங்களிப்பாகவும் உள்ளது. கிண்டி தொழிற்பேட்டையில் நடைபெற்று வரும் மேம்பாட்டுப் பணிகள் செப்டம்பர் **2009**க்குள் முடிவடையும்.

### 42.2 மைய அரசின் கூடுதல் உதவித் திட்டம் (ACA)

மைய அரசின் கூடுதல் உதவித்திட்டத்தின் கீழ், பயனாளிகளிடமிருந்து திட்ட மதிப்பீட்டின் **20** சதவீதம் ரூபாய் **48.80** இலட்சம் திரட்டப்பட்டு, மைய அரசின் பங்கு **80** சதவீதமான ரூபாய் **195.20** இலட்சம் பெறப்பட்டு, பேட்டை, ராணிப்பேட்டை மற்றும் கப்பலூார்(பகுதி–1) ஆகிய இடங்களில் உள்ள தொழிற்பேட்டைகளை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பேட்டை, ராணிப்பேட்டை ஆகிய தொழிற்பேட்டைகளில் உள்கட்டமைப்புகள் மேம்படுத்தும் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன. கப்பலூர் (பகுதி–1) தொழிற்பேட்டையின் மேம்பாட்டுப் பணிகள் ஜூலை **2009**க்குள் முடிக்கப்படும்.

### 42.3 தொழிற் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்(IIUS)

தொழிற்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அம்பத்தூர், திருமுடிவாக்கம் மற்றும் திருமழிசை தொழிற்பேட்டைகளின் உள்கட்டமைப்புப் பணிகள் மைய அரசின் தொழில் வணிக அமைச்சகம் ஒப்பளித்த சுமார் ரூ.**61.10** கோடி திட்ட மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் மைய அரசின் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.**2774.00** இலட்சமும் மற்றும் ஏற்றுமதிக்கான உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக மாநில அரசுக்கு உதவும் திட்டத்தின் கீழ் ரூ.**1168.00** இலட்சமும் அடங்கும். இத்திட்டத்திற்கு மாநில அரசு ரூபாய் **139.00**இலட்சமும், அம்பத்தூர்

நகராட்சி சொத்து வரியிலிருந்து ரூபாய் 150.00 இலட்சமும் பங்களிக்கின்றன. திட்ட மதிப்பீட்டின் மீதித் தொகையான ரூ.1879 இலட்சங்களை தொழிற்பேட்டையின் பயனாளிகள் அளிக்கின்றனர். இத்திட்டத்தின் கீழான மேம்பாட்டுப் பணிகளை, சென்னை வாகன உதிரி பாகங்கள் உள்கட்டமைப்பு மேம்படுத்தும் நிறுவனம் (CAAIIUC) என்ற பெயரில் ஒரு சிறப்பு நோக்க நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. அனைத்து மேம்பாட்டுப் பணிகளும் செப்டம்பர் 2009க்குள் முடிவடையும்.

**42.4** காஞ்சிபுரம், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் உள்ள தொழிற்பேட்டைகளின் மேம்பாட்டிற்கான பகுதித் தொகையாக ரூபாய் 20 லட்சம் 2008–09 ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டத்தின் கீழ் மானியமாக அரசு வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கு தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் ரூ.100 இலட்சம் பங்களிப்புத் தொகையாக வழங்கியுள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட தொழிற்பேட்டைகளில் நடைபெற்று வரும் மேம்பாட்டுப் பணிகள் ஜூலை 2009க்குள் முடிவடையும்.

**42.5** கிண்டியில் உள்ள திரு.வி.க. தொழிற்பேட்டையில் புதியதாக விற்பனைப் பொருள் காட்சி மையம் கட்டுவதற்காகவும், அரசு ரூபாய் 5 லட்சம் வழங்கி ஒப்பளிப்பு அளித்துள்ளது. இத்திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. கிண்டி தொழிற்பேட்டையில் தொழில் மற்றும் வணிக இயக்ககத்திற்குச் சொந்தமான 0.47 ஏக்கர் நிலம் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**43. புதிய தொழிற்பேட்டைகள்**

**43.1** 2008–09 ஆம் ஆண்டில் கீழ்க் காணும் 11 புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | இடம் | மாவட்டம் | தொழில் மனைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | அரக்கோணம் (பகுதி–2) | வேலூார் | 111 |
| 2 | ஆசனூர் | விழுப்புரம் | 155 |
| 3 | எலம்பலூர் | பெரம்பலூர் | 91 |
| 4 | காக்களூர் (பகுதி–2) | திருவள்ளூர் | 93 |
| 5 | கும்பக்குடி (பகுதி–1) | திருச்சிராப்பள்ளி | 50 |
| 6 | வாழவந்தான்கோட்டை (பகுதி–3) | திருச்சிராப்பள்ளி | 60 |
| 7 | விண்ணமங்கலம் | வேலூார் | 38 |
| 8 | கடகத்தூர் | தர்மபுரி | 30 |
| 9 | கப்பலூர் | மதுரை | 70 |
| 10 | வள்ளியூர் (பகுதி–2) | திருநெல்வேலி | 54 |
| 11 | மயிலாடுத்துறை | நாகப்பட்டினம் | 64 |

மேற்குறிப்பிடப்பட்ட 11 தொழிற்பேட்டைகளின் உள்கட்டமைப்புப் பணிகள் ரூ.2218 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2009–10–ஆம் ஆண்டில் கீழ்க் காணும் 3 புதிய தொழிற்பேட்டைகள் ரூபாய் 774 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டு வருகின்றன.

| வ. எண் | இடம் | மாவட்டம் | தொழில் மனைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பர்கூர் (பகுதி–2) | கிருஷ்ணகிரி | 100 |
| 2 | போளுப்பள்ளி | கிருஷ்ணகிரி | 135 |
| 3 | புதுக்கோட்டை (பகுதி–2) (சிப்காட்) | புதுக்கோட்டை | 104 |

இதைத் தவிர கீழ்க்காணும் இடங்களில் தொழிற்பேட்டைகள் அமைக்க நிலங்கள் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்றுவருகின்றன

| வ. எண் | இடம் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | சேடப்பட்டி | மதுரை |
| 2 | வைப்பூர் | திருவாரூர் |
| 3 | தண்டரை | காஞ்சிபுரம் |
| 4 | போளூர் | திருவண்ணாமலை |
| 5 | சங்ககிரி | சேலம் |
| 6 | வடமுகம்காங்கேயம் பாளையம் | ஈரோடு |
| 7 | கண்டியன்கோயில் | கோயம்புத்தூர் |
| 8 | நஞ்சை ஊத்துக்குளி | ஈரோடு |

**44. அடுக்குமாடித் தொழிற் கூடங்கள்**

2007–08 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட புதிய அறிவிப்புக்கு இணங்க, அடுக்குமாடித் தொழிற்கூடங்களைக் கீழ்க் காணும் இடங்களில் அமைத்து, குறுதொழில் நிறுவன அலகுகளுக்கு ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது:–

| வ.எண் | இடம் | மாவட்டம் |
|---|---|---|
| 1. | கிண்டி | சென்னை |
| 2. | திருமழிசை | திருவள்ளூர் |
| 3. | மாதவரம் | திருவள்ளூர் |
| 4 | அம்பத்தூர் | திருவள்ளூர் மற்றும் |
| 5. | பெருங்குடி | காஞ்சிபுரம் |

வாடகை இடங்களில் அமைந்துள்ள குறு தொழில் நிறுவன அலகுகளை, சொந்த இடங்களுக்கு மாற்றும் வகையில் முதல் கட்டமாக கிண்டி தொழிற்பேட்டையில் அடுக்குமாடித் தொழில் வளாகம்

கட்டும் பணி எடுத்துக் கொள்ளப்படும். இத்திட்டத்திற்கான மதீப்பீடு ரூ.28 கோடிக்கு சிட்கோ குழும ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக 1.91 ஏக்கர் பரப்புள்ள அரசு நிலத்தை தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு மாற்றுவதை எதிர்நோக்கி அதற்கான முன்நுழைவு அனுமதி வழங்கியும் அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**45. மூலப் பொருட்கள் விநியோகம்**

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் இரும்பு மற்றும் எஃகு, மெழுகு மற்றும் பொட்டாசியம் குளோரேட் ஆகிய மூலப்பொருட்களை உற்பத்தி அலகுகளின் தேவைக்கேற்ப 6 மூலப்பொருள் கிடங்குகள் மற்றும் 4 கிளை அலுவலகங்கள் வாயிலாக விநியோகிக்கிறது. 2007–08ல் ரூ.52.65 கோடி மதிப்பிலான மூலப்பொருட்களைக் கையாண்ட தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், 2008–09ல் ரூ 68.08 கோடி மதிப்பிலான மூலப்பொருட்களைக் கையாண்டுள்ளது. மேலும் ரூ. 10.29 கோடி மதிப்புள்ள தமிழ்நாடு காகித நிறுவனம் (TNPL) வழங்கும் காகிதத்தை 11 இடங்களில் அமைந்துள்ள விற்பனை நிலையங்கள் மூலம் வினியோகித்துள்ளது.

**46. விற்பனை உதவித் திட்டம்**

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்திடம், இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் சார்பாக, மாநில அரசுத் துறைகள் மூலம் கேட்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் கலந்து கொண்டு, கொள்முதல் ஆணைகளைப் பெற்று அவற்றைக் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் மூலம் நிறைவேற்றி வருகிறது.

2008–09 ஆண்டில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் ரூ.36.65 லட்சத்திற்கான கொள்முதல் ஆணைகளைப் பெற்று நிறைவேற்றி உள்ளது. மேலும் 2009–10 ஆம் ஆண்டில், ரூ.110 லட்சம் மதிப்பிலான கொள்முதல் ஆணைகளைப் பெற இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது .

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி)**

**47.** ‘டான்சி’ என்று பிரபலமாக அழைக்கப்பெறும் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனமானது 1.12.1965ல் நிறுவப்பட்டது. தொழில் மற்றும் வணிகத் துறையினால் தொடங்கப்பட்ட பல்வேறு சிறுதொழில் கூடங்களை ஒருங்கிணைத்து 1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் இந்நிறுவனம் உருவாக்கப்பட்டது. ஆரம்பகாலத்தில் ரூ.3.42 கோடி அளவு இருந்த விற்பனையானது படிப்படியாக அதிகரித்து 2003ல் சுமார் ரூ.50 கோடியாக உயர்ந்தது. ஆனால் உற்பத்திச் செலவு அதிகமானதால் இந்நிறுவனம் பெரும் இழப்பினை சந்தித்து வந்தது. இதனால் பெரும்பாலான உற்பத்திக் கூடங்களை மூட வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து பணியாளர்கள் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டது. அதன்பின் கடந்த 3 ஆண்டுகளில் அரசு எடுத்த பல்வேறு சீரிய முயற்சிகளின் பலனாக நலிவடைந்திருந்த இந்நிறுவனம் தற்போது புதுப்பொலிவுடன் செயல்பட்டுவருகிறது. 2005–

06ல் ரூ.61.80 கோடியாக இருந்த விற்பனையானது 2008–09ல் இதுவரை இல்லாதவகையில் ரூ.125.28 கோடியாக அதிகரித்து இந்நிறுவனம் புதிய சாதனை படைத்துள்ளது.

### 48. உற்பத்திக் கூடங்கள்

இந்நிறுவனத்தின்கீழ் 22 உற்பத்தி கூடங்களும் 14 திட்ட அலகுகளும் உற்பத்திப் பணியினை மேற்கொண்டுவருகின்றன. இவற்றின் மூலம் உற்பத்தி செய்து வழங்கப்படும் பொருட்களுடன் ஒப்பந்தப் புள்ளி முறையில் தனியார் நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்தும் இந்நிறுவனமானது மின்சாரம் வாரியம், வேளாண்மைத் துறை, மக்கள் நல் வாழ்வுத்துறை, நீதி மன்றங்கள், தொழில் துறை, குடிநீர் வழங்கல் துறை, கல்வித் துறை , போக்குவரத்து மற்றும் சமூக நலத்துறை போன்ற அரசின் பல்வேறு துறைகளுக்குத் தேவையான இரும்பு மற்றும் மரத் தளவாடங்கள், கனரக மற்றும் இலகு இரும்பு கட்டுமானப் பொருட்களை உற்பத்தி செய்து வழங்குதல் மற்றும், துத்தநாக முலாம் பூசுதல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

துத்தநாக முலாம் பூசப்பட்ட மின்கடத்தி மற்றும் நுண் அலை கோபுரங்கள், பல வகையான உயர் கட்டுமானங்கள், துத்தநாக முலாம் பூசுதல், ஆழ்குழாய் கைப்பம்புகள், தரமிக்க மரம் மற்றும் எஃகு இரும்பினாலான தளவாடங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதில் டான்சி தனித்தன்மை பெற்றுள்ளது. இந்நிறுவனம், அனைவருக்கும் கல்வித்திட்டம், கரும்பலகை செயல் திட்டம், வறட்சி காலத்தில் குடிநீர் பம்புகள் அமைத்தல் மற்றும் குழாய் உதிரி பாகங்கள் ஆகியவற்று;க்கு தேவையான உபகரணங்களையும் மாநிலம் முழுவதும் ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்று பொருட்களை வழங்கி வருகிறது.

மேலும், இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் (ISRO) வின்னேற்று வாகனத்திற்கு தேவையான மீள் சக்தியுள்ள இரும்புகள் (Springs) மற்றும் அசையாத (Fixtures) இரும்புகளையும், பாரத மிகு மின் நிலையத்தின் (BHEL) மின் உற்பத்தி தள அமைப்பிற்கு தேவையான இரும்பு உத்திரங்கள் மற்றும் இரும்புத் தூண்களையும் டான்சி தயாரித்து அளித்து வருகிறது..

### 49. 2008–09ன் செயல்பாடு மற்றும் 2009–10க்கான இலக்கு

(ரூ. இலட்சத்தில்)

| விவரங்கள் | 2008–09 | | 2009–10 |
|---|---|---|---|
| | இலக்கு | செயல்பாடு | இலக்கு |
| உற்பத்தி | 11000 | 12924.31 | 30000 |
| கொள்முதல் | 11000 | 12528.08 | 30000 |
| செயல்முறை இலாபம் | 1737.31 | 3155.85 | 4724.06 |

தமிழ்நாடு வர்ணம் மற்றும் உபபொருட்கள் நிறுவனம் (டாபாப்) பல்வேறு துறைகள் மற்றும் தனியார் வீடுகளுக்குத் தேவைப்படும் சிவப்பு ஆக்ஸைடு வர்ணம், சாலைகளில் போக்குவரத்து

குறியிடும் இரப்பர் கலந்த வர்ணம், மெழுகுத் தன்மை கொண்ட வர்ணம் மற்றும் இதர வர்ணங்களை உற்பத்தி செய்து வழங்கி வருகிறது.

**2008–09**ஆம் ஆண்டில், ''ராஜிவ் காந்தி கிராமிய மின் வழங்கல்'' திட்டத்தின் கீழ், தமிழ் நாட்டிலுள்ள **26** மாவட்டங்களில், வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களுக்கு, மின் இணைப்பு சாதனங்களை வழங்கிட ஒட்டுமொத்த ஒப்பந்த முறையில் (Turn Key basis) ரூ.**250** கோடி மதிப்பில் பல்வேறு பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு மின்சார வாரியம் டான்சி நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது.. இப்பணிகள் தற்போது செயல்பாட்டில் உள்ளன. நடப்பாண்டில் இப்பணிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும்.

**பொங்கலூர் நா.பழனிசாமி**
அமைச்சர் ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை

**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை**
**வரவு செலவுத் திட்ட மதிப்பீடு**
**கோரிக்கை எண்.44**

(ரூபாய் ஆயிரங்களில்)

| கணக்குத் தலைப்பு | 2008-09 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2008-09 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு | 2009-10 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 2851 கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் | 772222 | 855694 | 893036 |
| 2852 தொழில்கள் | 42133 | 48985 | 61595 |
| 3451 தலைமைச் செயலகம் பொருளாதாரப் பணிகள் | 26051 | 20831 | 23659 |
| 4425 கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு | 1974 | 1974 | 2 |
| 4551 மலைப் பகுதிகள் குறித்த மூலதனச் செலவு | 1 | 26338 | 1 |
| 4851 கிராமத் தொழில்கள் சிறு தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 6003 | 6003 | 3 |
| 6851 கிராமத் தொழில்கள் சிறுதொழில்களுக்கான கடன்கள் | 0 | 26338 | 1 |
| **மொத்தம்** | **848384** | **986163** | **978297** |

**பொங்கலூர் நா.பழனிசாமி**
அமைச்சர் ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை